MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# இளங்கோவடிகள் சமணரா?

## Whether Ilangovadikal was a Jain?

ந. தட்சணாமூர்த்தி M.A (தமிழ்), அஞ்சல்துறை கணக்கு அதிகாரி (ஓய்வு), பட்டுக்கோட்டை
மின்னஞ்சல்: ndmoorthy30@gmail.com ORCHID ID: https://orcid.org/0009-0004-5055-1713
DOI 10.5281/zenodo.18514540.

**Abstract:**

The religion of Ilangovadikal who wrote Silappadhikaram is not yet conclusively ascertained. Generally many consider him as a Jain. But no proper evidences are shown for this. This article tries to ascertain conclusively the religion of Ilangovadikal from the internal evidences found in Silappadhikaram .

**Keywords:** Silappadhikaram - Ilangovadikal - Arumpatha urai - Adiyarkunallar urai - Venkatasamy Nattar urai - Pathitruppathu.

**ஆய்வுச் சுருக்கம்:**

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் சமயம் எது என்பது இதுவரை உறுதியாக அறியப்படவில்லை. பொதுவாக, அவர் சமணர் என்று பலரும் கூறுகின்றனர். ஆனால் அதற்கு தகுந்த சான்றுகள் கூறப்படுவதில்லை. இக்கட்டுரை சிலப்பதிகாரத்தில் காணப்படும் அகச்சான்றுகளைக் கொண்டு இளங்கோவடிகளின் சமயத்தை முடிவாக அறியும் ஆய்வில் ஈடுபடுகிறது.

**திறவுச்சொற்கள்:**

சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள் - அரும்பதவுரை - அடியார்க்கு நல்லார் உரை - வேங்கடசாமி நாட்டார் உரை - பதிற்றுப்பத்து.

**முன்னுரை:**

பெரும்புலவர் பாரதியார் சிலப்பதிகாரத்தை 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்' எனப் புகழ்வார். தாமறிந்த புலவரிலே பூமிதனில் இவர்கள் போல் யாரும் பிறந்ததில்லை என அவர் கூறும் புலவர் மூவரில் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளும் ஒருவர். அத்தகைய சிறப்பு பெற்ற இளங்கோவடிகள் எந்த சமயத்தைச் சேர்ந்தவர் என்பது தமிழ் ஆய்வுலகத்தில் இதுவரை உறுதியாக நிறுவப்படாத ஒன்று. இக்கட்டுரை அவரது சமயம் என்ன என்பதை உறுதியாக அறியும் ஆய்வில் ஈடுபடுகிறது.

**இளங்கோவடிகள் சமணர் என்ற கருத்து:**

பொதுவாக, இளங்கோவடிகள் சமணர் என்பது பலரது கருத்தாக உள்ளது. ஆனால் அதற்குத் தகுந்த சான்றுகள் கூறப்படுவதில்லை. அறிஞர் வையாபுரிப் பிள்ளை தன், 'History of Tamil Language and Literature' என்ற நூலில் இளங்கோவடிகள் சமணர் என்பது நன்கறியப்பட்ட உண்மை போலக் குறிப்பிடுகிறார்[1]. ஆனால் இளங்கோ சமணர் என்பதற்கு உரிய சான்றுகள் எவற்றையும் அவர் குறிப்பிடவில்லை. உறுதியானவற்றை மட்டுமே தனது 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் கூறும் இயல்புடைய அறிஞர் சி.பாலசுப்ரமணியம் கூட சிலப்பதிகார பதிகத்தின் முதல் தொடர் இளங்கோவைச் சமணத்துறவி என்று கூறுவதாகக் குறிப்பிடுகிறார்[2]. 'சமணத் தமிழ் வரலாறு' என்ற நூலில் அறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், கவுந்தியடிகளும் சாரணரும் சமணக் கருத்துகளைக் கூறுவதைக் கொண்டு 'இது ஒரு சமணக் காவியம் எனலாம்' என்று கூறி மேலும் கூறுகையில் இளங்கோவடிகள் சமணப் பாத்திரத்திற்கு ஏற்ப சமணக் கருத்துகளைக் கூறுகிறார் என்றும் மற்ற பாத்திரங்கள் மூலம் பிற தெய்வங்களையும் உயர்வாகக் கூறுகிறார் என்றும் அவர் பொதுவான நோக்குடையவர் என்றும் குறிப்பிடுகிறார்[3]. இளங்கோவடிகளைச் சமண முனிவர் என்று அறிஞர் கே.கே. பிள்ளை தன், 'தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்[4]. இவ்வாறு பல அறிஞர்கள் தகுந்த காரணங்கள் குறிப்பிடாமல் இளங்கோவடிகளைச் சமணர் என்று கூறியுள்ளனர்.

**அடிகள் என்ற சொல்:**

கவுந்தி என்ற சமணத்துறவியை 'அடிகள்' என்ற சொல்லுடன் 'கவுந்தியடிகள்' என்று கூறியதால் 'அடிகள்' என்பது சமணத்துறவியைக் குறித்ததாகச் சிலர் கருதுவதாகத் தெரிகிறது. 'அடிகள்' என்பது உயர்ந்தோரைக் குறிக்கும் ஒரு பொதுவான சொல். சிலப்பதிகாரம் புறஞ்சேரியிறுத்த காதையில் கோவலனுக்கு மாதவியிடம்


http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்து கௌசிகன் மூலம் ஓலை வந்த செய்தி கூறப்பட்டுள்ளது. அந்த ஓலையில் கோவலனை 'அடிகள்' என்று குறிப்பிட்டு, "அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்" (சிலப். 13:87) என்று மாதவி எழுதியிருந்தாள். இந்த ஓலையில் எழுதி இருந்தவை தன் தந்தைக்கு தான் கூறுவ தற்கும் பொருந்தும் என்பதை உணர்ந்த கோவலன் அந்த ஓலையை அப்படியே தன் தந்தைக்கு அனுப்பினான். இங்கு 'அடிகள்' என்பது அவன் தந்தையைக் குறித்தது. எனவே 'அடிகள்' என்பது சமணத்துறவிக்கே உரிய சொல்லன்று என அறியலாம்.

**அடியார்க்கு நல்லார் கூற்று:**

சிலப்பதிகார உரைகளுள் அரும்ப தங்களுக்கு பொருள் கூறி, ஆங்காங்கே சுருக்கமான விளக்கம் தரும் 'அரும்பதவுரை' பழைமையானது. அதன்பின் தோன்றிய அடியார்க்கு நல்லார் உரை விரிவானது. இது அரும்பதவுரையைப் பெரிதும் பின்பற்றியும் சில இடங்களில் மாறுபட்டும் அமைந்துள்ளது. சிலப்பதிகாரப் பதிகத்தில்,

**"குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த**
**குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு"** (சிலப். பதிகம்:1-2)

என்ற தொடருக்குப் பொருள் கூறும்போது, அரும்பதவுரை, 'குணவாயில் கோட்டம்' என்பதற்கு 'திருக்குணவாயிற் கோயில்' என்று பொருள் கூறுகிறது[5]. அடியார்க்குநல்லார் உரை 'கோட்டம்' என்பதற்கு 'அருகன் கோயில்' எனப் பொருள் கூறுகிறது[6]. இவ்வாறு அருகன் கோயிலில் துறவு மேற்கொண்டதாக அடியார்க்கு நல்லார் உரை கூறுவதால் பலரும் இளங்கோவைச் சமணத்துறவி என்று கருதுவாராயினர். இதைக் கொண்டே அறிஞர் சி. பாலசுப்ரமணியன் தனது நூலில், பதிகத்தின் முதல் தொடர் இளங் கோவைச் சமணத்துறவி என்று கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். 'கோட்டம்' என்பது கோயில் என்ற பொதுவான பொருள் கொண்டது. அரும்பதவுரை ஆசிரியரும் அவ்வாறே கோயில் என்று பொதுவாகவே குறிப்பிடுகிறார். 'அருகன் கோயில்' என்று குறிப்பிடும் அடியார்க்கு நல்லார் உரை அதற்குரிய விளக்கம் எதையும் கூறவில்லை. பொதுவாக, ஒரு உரையாசிரியர் கூறுவதனாலேயே அது சரியானதாக இருக்கும் என்று முழு உறுதியாகக் கருத இயலாது. வெவ்வேறு உரையாசிரியர்களின் உரைகள் ஒன்றுக்கொன்று மாறுபடுதல் பல இடங்களில் உண்டு. எனவே இரண்டு உரைகள் மாறுபடும்போது அவற்றில் ஒன்றாகிலும் தவறு என்பது உறுதி. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு மிக அரிய செய்திகளைக் கொண்ட நுட்பமான உரையை எழுதியவர். இவர் சிவனை முதன்மைக் கடவுளாகக் கருதும் சைவர் என்பது அவர் உரையில் இருந்து தெளிவாகிறது[7]. விரிவாக விளக்கம் தரும் இயல்புடையவரும் சைவருமான அவரது உரையில் எந்த விளக்கமும் இல்லாமல் கோட்டம் என்பதற்கு அருகன் கோயில் என்று பொருள் கூறப்பட்டிருப்பது ஐயத்தை ஏற்படுத்துகிறது. இது ஏடெழுதுவோர் பிழையாகவோ இடைச்செருகலாகவோ இருக்க வாய்ப்பு உண்டு. அண்மைக் காலத்தில் சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட் டார், கோட்டம் என்பது கோயிலையே குறிக்குமே தவிர அருகன் கோயில் என்பது பொருந்தாது என்று கூறி, "அடியார்க்கு நல்லார் கோட்டம் என்பதற்கு அருகன் கோயில் என்று பொருள் கூறியது அடிகள் என்னும் பெயர் சைன சமயத் துறவிகட்கு உரியதென்னும் கருத்தினால் போலும்! அடிகள் என்பது இறை வனுக்கும் அவன் அடியார்க்கும் வழங்கும் பொதுப்பெயர் ஆவதன்றி, அருக சமயத் துறவிகளையே குறிப்பது ஒன்று அன்று…", எனக் குறிப்பிட்டுள்ளார்[8]. மிகச் பெரும் அறிவு கொண்ட அடியார்க்கு நல்லார் இதை அறியாதவராக இருக்கமாட்டார் என்பதால் இது இடைச்செருகலாக இருப்பதற்கே மிகவும் வாய்ப்பு உண்டு. எப்படி இருப்பினும் அடியார்க்கு நல்லார் உரையில் உள்ளதை வேதவாக்காகக் கொள்ளாமல் சான்றுகளை ஆராய்ந்து முடிவு செய்வதே முறையாகும்.

**கவுந்தியடிகள் இளங்கோவின் கருத்துகளுக்கு வாயில் எனல்:**

சிலப்பதிகாரத்தில் காணப்படும் அகச்சான்றுகளைக் கொண்டு இளங்கோவின் சமயத்தை ஆராய்ந்து அறிதலே சிறந்த முறையாகும். கவுந்தியடிகள் சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு முக்கிய பாத்திரம். சமணக் கருத்துகள் பலவும் கவுந்தியடிகள் மூலமும் சாரணர் மூலமும் கூறப்பட்டுள்ளன. எனவே சிலர் இளங்கோ சமணர் என்றும் தன் கருத்துகளை அவர் கவுந்தியடிகள் மற்றும் சாரணர் வாயிலாகக் கூறியுள்ளார் என்றும் கூறுவர். தற்காலத்தில் இலக்கியப் படைப்புத் திறன்களுள் பாத்திரப்படைப்புத் திறன் சிறப்பாகக் கருதப்படும் ஒன்று. மிகப் பழங்காலத்திலேயே, செய்யுள் இல க்கியத்திலேயே, இளங்கோவடிகள் பாத்திரப் படைப்பில் மிகச் சிறந்து


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II

FEB – 2026 E-ISSN : 2584 – 1238

விளங்கியதை அவர் படைத்த பாத்திரங்களின் மூலம் கண்டு நாம் வியப்படையாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு பாத்திரத்தையும் அவரவருக்கு ஏற்ற குணநலன்களுடன் சிறப்பாக அவர் படைத்துள்ளார். கவுந்தியடிகள் பாத்திரத்தை ஒரு தீவிர சமணத் துறவியாகப் படைத்துள்ளார். அதேசமயம் மாங்காட்டு மறையோன், மாடல மறையோன், பராசரன் ஆகியோரை வைதிக நெறியில் சிறந்து நிற்கும் பாத்திரங்களாகப் படைத்துள்ளார். எனவே கவுந்தியடிகள் பாத்திரத்தைக் கொண்டு இளங்கோ சமணர் என்று கூறுவது முற்றிலும் பொருந்தாதது

**இளங்கோவடிகளின் சமயத்தை அறிதல்:**

சிலப்பதிகாரத்தில் சமயக் கருத்துகளும், அவை தொடர்பான பிற கருத்துகளும் நிறைய கூறப்பட்டுள்ளன. இவற்றை முழுமையாக ஆராய்ந்தால் இளங்கோவடிகளின் மனத்தின் உட்கிடையைப் புரிந்து அவரது சமயத்தை உணரலாம். மேலும் அவர் தன்னுடைய கூற்றாகக் குறிப் பிட்டுள்ளவற்றை ஆராய்ந்தும் அவரது சமயத்தை அறியலாம். சிலப்பதிகாரம் நெடுகிலும் காணப்படும் சமயத் தொடர்பான கருத்துகளை இனி நாம் கண்டு அவற்றை ஆராய்வோம்.

**சிலப்பதிகாரத்தில் சமயக் கருத்துகள்:**

**வாழ்த்து:**

சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் வாழ்த்து அமைந்துள்ளது. கடவுள்களை வாழ்த்தும் இடத்தில் சந்திரன், சூரியன், மழை ஆகியவற்றை இளங்கோவடிகள் வாழ்த்துகிறார். (சிலப். 1.1-9). அவற்றுடன் சோழர் தலைநகரான புகார் நகரத்தையும் போற்றுகின்றார். பௌத்தர்கள் புத்தரையே முதலிடத்தில் போற்றுபவர்கள். புத்தருடன், அவர் போதித்த தருமம் (அதாவது புத்த சமயம்), பௌத்த சங்கம் ஆகியவற்றையும் போற்றுவார்கள். அதுபோல சமணர்கள் அருகனையே முதலிடத்தில் போற்றுபவர்கள். அருகனுடன் சித்தர்கள், ஆசாரியர்கள், உபாத்யாயர்கள், சாதுக்கள் (சமணத் துறவிகள்) ஆகியோரையும் போற்றுவார்கள். பௌத்தத்திலும் சமணத்திலும் சந்திரன், சூரியன், மழை ஆகியவற்றை இயற்கைப் பொருள்களாகவோ அல்லது அவற்றை இயக்கும் தேவர்களாகவோ கொண்டு போற்றுவதைக் காண முடிவதில்லை. வைதிக இந்து மதத்தில் - அதாவது வேதத்தில் தோன்றி புராண, ஆகமங்களில் வளர்ச்சி பெற்ற இந்து சமயத்தில் - இவை மூன்றும் பெரிதும் போற்றப்படுகின்றன. சூரியன் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு பெயர் கொண்டு மிகப்பலவான பாடல்களால் ரிக் வேதத்தில் போற்றப்படுகிறது. அவ்வாறே சோமன் எனப்படும் சந்திரனைப் போற்றும் ரிக் வேதப் பாடல்கள் பலப்பல. பர்ஜன்யன் (पर्जन्य) என்ற மழையும் ரிக் வேதத்தில் போற்றப்படுகிறது. ரிக் வேதத்தில் சூரியன், சோமன், பர்ஜன்யன் ஆகியவற்றைப் போற்றும் சூக்தங்களில் ஒவ்வொன்று மேற்கோளில் காட்டப்பட்டுள்ளது[9]. இவை இயற்கைப் பொருள்களாகவும் அவற்றை இயக்கும் தேவராகவும் இரு பொருள்படும்படிக் கூறப்பட்டுள்ளன. சூரியனையும் சந்திரனையும் வணங்குதல் இந்துக்களிடம் இன்றும் உண்டு. புகார் நகரி ல் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கோயில்கள் இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. (சிலப். 9:10-13). சந்திரனைப் போற்றி வணங்கும் தேவபாணிப் பாடல் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது (சிலப். 6:36-37). எனவே இளங்கோ பாடிய கடவுள் வாழ்த்து வைதிகத்தைத் தழுவியது என்றும் சமண, பௌத்தத்துக்கு மாறுபட்டது என்றும் அறியலாம்.

**கோவலன், கண்ணகி திருமணம்:**

கண்ணகியைப் பற்றிக் கூறும்போது இளங்கோவடிகள்,

**"தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்**
**மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்து"** (சிலப். 1:27-28)

என்று கூறுகிறார். வேத முனிவரான வசிட்டரின் மனைவியான அருந்ததி கற்புக்கரசி எனப் போற்றப்படுபவள். இரவில் வடதிசை வானத்தில் தெரியும் சப்தரிஷி மண்டலம் என்ற விண்மீன் கூட்டம் ஏழு முனிவர்களின் பெயரால் அழைக்கப்படுகிறது. அதில் வசிட்டர் என்ற விண்மீனை ஒட்டிப் பிரியாமல் உள்ள சிறு விண்மீன் அருந்ததி விண்மீனாகும். இது தமிழில் 'வடமீன்' எனப்படும். கற்பில் சிறந்த பெண்களைச் சுட்டுவதற்கு 'வடமீன் போன்றவள்' என்று கூறுவதை சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணலாம். இங்கு, 'அருந்ததி போலக் கற்புடையவள் என்று பெண்கள் தொழுது போற்றும் குணம் உடையவள் கண்ணகி என இளங்கோ கூறுகிறார்.

கோவலன் கண்ணகி திருமணத்தை இளங்கோ கூறும்போது இவ்வாறு கூறுகிறார்

**"வான்ஊர் மதியம் சகடுஅணைய வானத்துச்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்**
**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலம் செய்வது காண்பார்க்கண் நோன்பென்னை’** (சிலப். 1: 50-53)

‘சந்திரன் ரோகிணி நட்சத்திரத்தில் தங்க (அதாவது ரோகிணி நட்சத்திர நாளில் ), பெருமை மிக்க, முதிய பார்ப்பான் வேத முறைப்படி சடங்குகளைச் செய்யவைக்க , வானத்து அருந்ததி போன்றவளான கண்ணகியைக் கோவலன் அக்கினியை வலம் வந்து மணந்த காட்சியைக் கண்டவர்களின் கண்கள் என்ன தவம் செய்தனவோ ’ என்று இளங்கோ தன்னுடைய கூற்றாகக் கூறுகின்றார்.

**கண்ணகியைக் கோவலன் புகழ்தல்:**

திருமணம் முடிந்தபின் ஒருநாள் இருவரும் நிலாமுற்றத்தில் மகிழ்ந்து இருக்கின்றனர் . அப்போது கண்ணகியின் அழகைக் கோவலன் பலவாறாகப் புகழ்ந்து கூறுகிறான். அப்போது இவ்வாறு கூறுகிறான்:

‘பிறைநிலவானது பெரியோன் (பெரிய கடவுள்; மகாதேவன்) தலையில் தேவர்கள் தொழும்படி அழகாக இருக்கும் சிறப்புடையது என்றாலும் அது திருமகளான உன்னுடன் பாற்கடலில் தோன்றிய உன் உடன்பிறப்பு என்ற உனது உரிமையால் உனக்கு நெற்றி ஆகட்டும் என சிவன் அதை உனக்குத் தந்துவிட,

பகைவருடன் போர் செய்யும் வீரர்கள் வெற்றி பெறுவதற்காக அரசன் படைக்கலன்கள் வழங்குவது போல, மன்மதன் என்னை வெல்வதற்கு தன்னுடைய கரும்புவில்லை உனக்கு இரு புருவங்களாக்கிக் கொடுத்துவிட,

பாற்கடலைக் கடைந்தபோது தேவர்களுக்கு இறப்பின்மையைத் தரும் அமுதம் தோன்றுவதற்கு முன்பாக அதன் உடன்பிறப்பாக, இலக்குமியாகிய நீ தோன்றியதால் தேவர்களின் அரசன் இந்திரன் இடைப்பகுதி ஒடுங்கிய தனது வச்சிராயுதத்தை (பரிசாக) உனக்கு இடையாகக் கொடுத்துவிட,

ஆறுமுகக் கடவுளும் என்னைக் கொல்வதால் அவனுக்கு ஒரு பயனும் இல்லாவிட்டாலும் கூட , என்னைக் கொல்வதற்காக அல்லவா தன் நெடிய வேலை உன் இரு கண்களாக்கிக் கொடுத்துள்ளான் !’ என்று வர்ணித்துக் கண்ணகியைப் புகழ்ந்து கூறுகிறான் (சிலப். 2:36-52). இங்கு கண்ணகியின் அழகைப் புகழ்வதற்கு இளங்கோவடிகள் இந்து புராணங்களையும் இந்து தெய்வங்களையும் எடுத்துக் கொண்டுள்ளார் . இது அவரது தற்சார்பு நிலையைக் காட்டுகிறது எனக் கொள்ளலாம்.

**உருப்பசியின் சாபம்:**

அரங்கேற்று காதையில் மாதவியை அறிமுகம் செய்யும் இளங்கோவடிகள் அவள் உருப்பசியின் வழிவந்தவள் என்று கூறும்போது உருப்பசியின் சாபம் பற்றிய குறிப்பினைக் கூறுகிறார் . கடலாடுகாதையிலும் இதைப் பற்றிய குறிப்பு உள்ளது . இது பற்றிய விளக்கத்தினை அடியார்க்கு நல்லார் ஒரு பழைய செய்யுளை மேற்கோள் காட்டிக் கூறுகிறார் [10]. ஒருமுறை அகத்திய முனிவர் தேவலோகத்துக்குச் செல்ல , இந்திரன் அவரை வரவேற்று அவர் காண்பதற்கு உருப்பசியின் நடனத்தை நிகழ்த்தச் செய்தான் . இந்திரன் மகன் சயந்தன் மேடையில் உருப்பசியின் கவனத்தைக் கவர, இருவருக்கும் ஏற்பட்ட காதல் உணர்வால் உருப்பசியின் நடனம் பாடலுடனும் இசையுடனும் பொருந்தாமல் தடுமாறியது . கலகக் குணம் கொண்ட நாரதன் இதை அறிவிப்பது போல வீணையின் பகை நரம்பை மீட்டினான். இதனால் ஆடல், பாடல் சிதைந்துவிட, சினம் கொண்ட அகத்தியர் நாரதன் வீ ணை மங்கலம் இழக்கவும் உருப்பசி பூவுலகில் பிறக்கவும் சயந்தன் மூங்கிலாகப் பிறக்கவும் சாபமிட்டார். அவர்கள் வேண்டியதால் , உருப்பசி பூமியில் அரங்கேறும் நாளில் சயந்தன் புல்லாங்குழலாக இசைக்கும்போது சாபம் நீங்கும் எனச் சாபவிடை கொடுத்தார் . அவ்வாறே சாபம் நீங்கியது . மாதவி எனப்பட்ட உருப்பசியின் வழிவந்தவளே சிலப்பதிகார மாதவி . இங்கு புராணச் செய்தியினைக் கூறி மாதவியை அறிமுகம் செய்கிறார் இளங்கோ.

**இந்திர விழா:**

இந்திரவிழவூரெடுத்த காதையில் புகார் நகரில் இந்திர விழா நடந்தது பற்றி இளங்கோவடிகள் விரிவாகக் கூறுகிறார். தெருக்கள் அலங்கரிக்கப்பட்டன. புகார் நகரில் மந்திர சக்தியுடைய பின்வரும் இடங்கள் இருந்தன . துறைமுகத்தில் பண்டங்களைத் திருடுவோர் உளராயின் அவர்கள் தலை மேல் கொண்ட சுமையுடன் சுற்றிச் சுற்றி வருதலைச் செய்யக்கூடியதும் , கள்வர் நினைத்தாலே நடுங்கும் இயல்புடையதுமான வெள்ளிடைமன்றம் ; கூனர், குறளர், தொழுநோயாளிகள் முதலியோர் வணங்கி மூழ்கி நலம் பெறும் பொய்கை கொண்ட இலஞ்சி




http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

மன்றம்; மருந்தூட்டப்பட்டு பித்தேறியவர் , நஞ்சால் துன்புறுவோர் , பாம்பு தீண்டியோர் , பேயால் துன்புறுவோர் ஆகியோர் வந்து தொழுது துன்பம் நீங்கும் நெடுங்கல் நின்ற மன்றம் ; கொடிய செயல்கள் செய்வோரைப் புடைத்து உண்ணும் பூதம் நிற்கும் பூதச் சதுக்கம் ; அரசனோ, அறம் கூறும் அவையினரோ நடுநிலை தவறி நடந்தால் கண்ணீர் சொரிந்து அழக்கூடிய பாவை நிற்கும் பாவை மன்றம் ஆகியவையே இந்த ஐந்து இடங்கள் . இந்திர விழாத் தொடக்கத்தில் இந்த இடங்களில் உள்ள தெய் வங்களுக்குப் பலியிட்டு (உணவு படைத்து ) வணங்கினர். இந்திரனுக்கு உரிய வச்சிராயுதக் கோயிலில் உள்ள முரசினை யானையின் மேல் ஏற்றி , இந்திரனின் யானையான ஐராவதத்திற்கு உரிய கோவிலுக்குக் கொண்டு சென்று , இந்திரவிழா தொடங்கி நடந்து முடியும் நாட்களின் விபரத்தை முரசறைந்து , தேவலோகக் கற்பக மரத்துக்கு உரிய கோயிலில் வானுயர்ந்த கொடியை ஏற்றினர். அரச குமாரர்களும் வணிக குமாரர்களும் குதிரைகள் , யானைகள், தேர்களில் ஊர்வலமாகச் சென்று காவிரியின் புனித நீரை பொற்குடத்தில் எடுத்துக் கொணர்ந்து மண்ணுலகத்தில் உள்ளோர் மருளுமாறும் விண்ணுலகில் உள்ள தேவர் வியக்குமாறும் இந்திரனுக்கு (வச்சிராயுதத்துக்கு) அபிடேகம் செய்தனர். பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் (பிறப்பு அற்ற பெருங்கடவுளான சிவனின் கோயில் ), ஆறுமுகன் கோயில் , பலராமன் கோயில், திருமால் கோயில், இந்திரன் கோயில் ஆகிய இடங்களில் மாமுது முதல்வன் (சிவன்) தந்த வாய்மையில் வழுவாத நான்கு வேதங்களின் நெறியில் ஓமங்கள் நடைபெற்றன . ஆதித்தர், வசுக்கள், ருத்திரர், அஸ்வினிதேவர் என்று நான்குவகைப்பட்ட வேதக்கடவுள்கள் 33 பேருக்கும், கின்னரர், கிம்புருடர், நாகர், இயக்கர் முதலிய 18 கணத்தினருக்கும் விழாக்கள் நடத்தப்பட்ட ன. அறவோர் பள்ளிகளிலும் (பௌத்த, சமணப் பள்ளிகள்), அறத்தைக் விளக்கும் இடங்களிலும், புறத்தேயுள்ள கோயில்களின் புனித இடங்களிலும் சமய அறிவில் சிறந்தோர் சமயக் கருத்துகளை மக்களுக்கு விளக்கி உரைத்தல் நிகழ்ந்தது (சிலப். 5:115-181). இங்கு இளங்கோவடிகள் தன் கூற்றாக சிவனையும், வேதத்தையும் உயர்வாகக் கூறும் சொற்கள் நோக்கத் தக்கவை

**மாதவியின் ஆடல்கள்:**

இமயத்தில் உள்ள சேடி என்ற வித்யாதர நகரில் காமன் விழாவை நடத்தி முடித்த ஒரு விஞ்சையன் அதன்பின் புகார் நகரில் நடைபெறும் இந்திர விழாவைக் காண அங்கிருந்து தன் காதலியுடன் வான்வழியாக வருகிறான். மாதவியின் ஆடல்களைக் கண்டு இருவரும் மகிழ்கின்றனர் . மாதவி முதலில் இறைவணக்கப் பாடல்களுக்கு ஆடுகிறாள் . காக்கும் கடவுள் திருமாலையும் , நான்கு வருணங்களுக்கும் உரிய பூதங்களையும் , அனைவருக்கும் நலம் தரும் சந்திரனையும் போற்றிப் பாடி ஆடிய பிறகு மரபுப்படியா ன 11 வகை ஆடல்களை ஆடுகின்றாள் அந்த 11 வகை ஆடல்கள் பின்வருமாறு:

1. கொடுகொட்டியாடல் - தேவர்கள் வேண்டியதால் நெற்றிக் கண்ணைத் திறந்து திரிபுரங்களை எரித்து அசுரர்களை அழித்த சிவபெருமான் , எரிந்து சாம்பலாகிய அந்த சுடுகாட்டில் நின்று , உமை தன் உடலின் ஒரு புறமாக இருந்து பாணி, தூக்கு, சீர் என்ற தாள இசைகளைத் தர , அவன் கைகொட்டி ஆடியது இந்த நடனம். இந்நடனம் கலித்தொகையிலும் கூறப்பட்டுள்ளது (கலி.க.வா:5-7).
2. பாண்டரங்கக் கூத்து - தேவர்கள் என்ற தேரிலே , நால்வேதங்களைக் குதிரைகளாக்கி , நான்முகன் தேரோட்ட, திரிபுரத்தை எரிக்கச் சென்ற சிவன் திரிபுரத்தைச் சாம்பலாக்கிய பின் அந்த வெண்சாம்பலை உடலெங்கும் பூசி வெண் சாம்பல் அரங்கத்தில் நான்முகன் காணுமாறு ஆடிய ஆட்டம். கலித்தொகையில் இதுவும் குறிப்பிடப்பட்டுள்ளது (பாண்டு - வெண்மை) (கலி.க.வா:8-10).
3. அல்லியத் தொகுதி - கம்சன் தன்னைக் கொல்ல அனுப்பிய யானை யின் கொம்பை ஒடிப்பதற்கு கண்ணன் ஆடிய ஆட்டம்.
4. மல்லாடல் - வாணாசுரனை மற்போரில் கண்ணன் கொன்ற ஆட்டம்.
5. துடிக் கூத்து - கடல் நடுவே சூரபத்மனுடன் போரிட்டு அவனைக் கொன்ற முருகன் துடி கொட்டி ஆடிய நடனம்.
6. குடைக்கூத்து - முருகன் அசுரர்களுடன் போர் செய்யும்போது அவர்கள் தங் கள் படைக்கலன்களை எல்லாம் இழந்து நிற்க முருகன் குடையைத் திரை போல் பிடித்து ஆடிய குடைக் கூத்து
7. குடக் கூத்து - கண்ணனின் பேரன் அநிருத்தனை வாணாசுரன் சிறை வைத்ததால் அவனை மீட்கச் சென்ற கண்ணன் வாணாசுரனின் சோ நகர வீதியில் குடம் கொண்டு ஆடிய ஆட்டம்


http://Creativecommons.org//license/by/4.0/.

8. பேடியாடல் - காமனின் அம்சமாகக் கண்ணனுக்குப் பிறந்த பிரத்யும்னன் , தன் மகன் அநிருத்தனைச் சிறை மீட்க வாணாசுரனின் சோ நகரத்துக்குச் சென்று அங்கு பேடிக் கோலத்தில் ஆடிய நடனம்.
9. மரக் கால் ஆடல் - பாம்பு, தேள் முதலிய உருவம் எடுத்து மாயப்போர் செய்த அசுரரை வெல்வதற்கு துர்க்கை மரத்தால் ஆன கால் கொண்டு ஆடிய ஆட்டம்.
10. பாவைக்கூத்து - போருக்கு வந்த அசுரர்கள் போரைக் கைவிடும்படி தன் அழகால் மயக்கி இலக்குமி ஆடிய பாவை நடனம் . கொல்லிமலையில் இந்தப் பாவை உருவம் பெரிதாக அமைக்கப்பட்டிருந்தது என்றும் அதன் அழகு பார்ப்பவர்களை மயங்க வைக்கும் என்றும் பல ச ங்கப்பாடல்களில் குறிப்புகள் உள்ளன (நற். 185 : 7-11, 192: 8-9, 201: 5-12, குறு. 89: 4-7, 100: 5-6, அக. 62:13-15, 209: 15-17)
11. கடையம் - வாணாசுரனின் சோ நகரத்தின் வடக்குவாயில் அருகே வயல்வெளியில் நின்று உழத்தி உருவில் அயிராணி (இந்திராணி) ஆடிய கடைசிக் கூத்து (கடைசியர் - உழத்தியர்).

மாதவியின் ஆடல்களாக இளங்கோவடிகள் குறிப்பிடும் தேவ பாணி (இறை வணக்கம்) மற்றும் 11 வகை ஆடல்களை (சிலப். 6:1-70) பற்றிய விளக்கத்தை அடியார்க்கு நல்லார் உரையால் அறிகிறோம்[1].

**தேவந்தி:**

கண்ணகியின் ஒரு பார்ப்பனத் தோழி தேவந்தி . இவளது வரலாறு கனாத்திறம் உரைத்த காதையில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு பார்ப்பனனுக்கு இரண்டு மனைவிகள் . ஒரு மனைவியின் குழந்தைக்கு மாற்றாள் மாலதி பால் கொடுத்தாள் . பால் புரையேறி குழந்தை இறந்துவிட்டது . கலங்கித் தவித்த மாலதி குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஒவ்வொரு கோயிலாகச் சென்று தெய் வங்களிடம் மன்றாடினாள். கற்பகக் கோயில், ஐராவதக் கோயில், பலதேவன் கோயில் , சூரியன் கோயில் , ஊர்க்கோயில் (சிவன் ஊரான கைலாயக் கோயில் என்பர் உரையாசிரியர்கள். ஊருக்கு நடுவே அமைந்த சிவன் கோயில் என்பது பொருத்தமாகத் தோன்றுகிறது ), முருகன் கோயில், இந்திரனது வச்சிராயுதக் கோயில், ஐயனார் கோயில் , அருகன் கோயில் , சந்திரன் கோயில் ஆகியவற்றுக்கு சென்று தெய்வங்களிடம் மன்றாடிப் பின் பாசண்ட சாத்தன் கோயிலில் வரம் வேண்டிக் கிடந்தாள் அப்போது சுடுகாட்டில் பிணம் தின்னும் ஒரு இடாகினிப் பேய் அழகிய பெண் வடிவம் கொண்டு அவளிடம் சென்று, குழந்தையைக் கையில் வாங்கி தின்றுவிட்டது. இடியுண்ட மயில் போல் தவித்த மாலதிக்கு இரக்கப்பட்டு பாசண்ட சாத்தன் குழந்தையாய் உருவெடுத்து அருகே தோன்றினான் . குழந்தையை எடுத்து மகிழ்ந்த மாலதி மாற்றாளிடம் கொடுத்தாள். அக்குழந்தை வளர்ந்த பின் தேவந்தி அவனுக்கு மனைவியானாள். சில காலம் சென்று சாத்தன் தன் தெய்வ வடிவை தேவந்திக்குக் காட்டி ‘என் கோயிலுக்கு வருக ’ என்று கூறி மறைந்துவிட்டான் . தேவந்தி தன் கணவன் தீர்த்தமாடச் சென்றுவிட்டதாகவும் அவனை மீட்டு வரச்செய்ய கோயிலுக்குச் செல்வதாகவும் பிறருக்குக் கூறி சாத்தன் கோயிலுக்குச் சென்றுகொண்டி ருந்தாள். கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகியின் துன்பத்துக்கு வருந்திய அவள் கண்ணகிக்காக சாத்தன் கோயிலில் வழிபாடு செய்து பின் கண்ணகியைக் கண்டு, ‘பெறுக கணவனோடு’ என்று வாழ்த்தினாள். காவிரி கடலில் கலக்கும் இடத்தில் உள்ள சோம குண்டம் , சூரிய குண்டம் என்ற தீர்த்தங்க ளில் முழுகி காம தேவன் கோயில் சென்று வணங்கினால் கணவனைப் பெற்று எந்நாளும் பிரியாமல் வாழலாம் என்று கூறினாள் . கண்ணகியோ, ‘அது பெருமை தருவது அல்ல (பீடன்று)’ எனக் கூறி மறுத்துவிட்டாள் (சிலப். 9:4-64). இச்செயல் கணவனுக்கு இழுக்கு தரும் என்று அவள் கருதியிருக்கக் கூடு ம். சிலர் அவள் தெய்வத்தைத் தொழாமல் கணவனையே தொழுபவள் என்பதால் அப்படிக் கூறினாள் என்பர் . மதுரை செல்லும் வழியில் திருமால் கோயிலில் கோவலனுடன் கண்ணகி திருமாலை வணங்கியதால் அக்கருத்து பொருத்தமாகத் தோன்றவில்லை.

**புகாரில் இருந்து போதல்:**

மாதவி மேல் வெறுப்பு கொண்டு தன் வீட்டுக்கு வந்த கோவலன் மதுரை சென்று சிலம்பை விற்பதற்காக கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரைக்குப் புறப்படுகிறான். யாரும் அறியாவண்ணம் அதிகாலை இருட்டினில் புறப்படும் அவர்கள் மதிலைக் கடந்தவுடன் திருமால் கோயில் வருகிறது. இருவரும் அதை வலம்வந்து வணங்கிச் செல்கின்றனர. அதன்பின் இந்திர விகாரம் ஏழு அமைந்த புத்தக் கோயிலைக் கடந்து செல்கின்றனர் . அதை அவர்கள் வணங்கிச் செல்வதாகவே தோன்றுகிறது. பின் சமணர் கோயில் வருகிறது. அங்கு அசோக மரத்தின் கீழ் சாரணர் வந்து அருளுரை ஆற்றும் சிலாதலத்தை (கல்மேடையை) வலம் வந்து வணங்கிச் செல்கின்றனர் (சிலப்.


http://Creativecommons.org//license/by/4.0/.

10:1-25). கோவலனும் கண்ணகியும் சமயக் காழ்ப்புணர்ச்சி இன்றி எல்லாச் சமயத் தெய்வங்களையும் எல்லாச் சமயப் பெரியோரையும் வணங்குகின்றனர் . இளங்கோவடிகளும் எல்லாச் சமயக் கோயில்களையும் , எல்லாச் சமயப் பெரியோரையும் உயர்வாகவே தன் கூற்றாகக் கூறியுள்ளார்.

**கவுந்தியடிகள்:**

ஊரை நீங்கி ஒரு காவதம் சென்றபின் கவுந்தியடிகள் என்ற சமணப் பெண் துறவியின் பள்ளியில் உள்ள சோலையில் இருவரும் இளைப்பாறுகின்றனர் . கவுந்தியடிகளைக் கண்டு வணங்குகின்றனர் . கவுந்தியடிகள் மதுரையில் உள்ள சமணத் துறவிகளைக் காண , தானும் வருவதாகக் கூறி அவர்களு டன் புறப்படுகின்றார் . அவர்கள் திருவரங்கத்தை அடைந்தபோது புகார் நகரில் சமணர் கோவிலில் சிலாதலத்தில் அருளுரை நிகழ்த்தும் சாரணர் அங்கு ஒரு சோலையில் இருப்பதைக் கண்டு மூவரும் சாரணரை வணங்குகின்றனர்.

கோவலன், கண்ணகியை சாரணர் கண்டவுடன் அவர்களின் வருங்காலத்தை அவர் உ ணர்ந்தபோதும் அவர் விருப்பு, வெறுப்புகளைக் கடந்த வீரன் என்பதால் அதை எண்ணித் துன்புறாமல் அவர்களுக்கு அறவுரை கூறுகிறார். வினைப்பயன் தன் பலனைத் தந்தே தீரும் என்றும் உயிர்வாழ்க்கை நிலையற்றது என்றும் அருகன் அருளிய ஆகம ஞானத்தால் மட்டுமே வீடுபேறு பெற முடியும் என்றும் சாரணர் விளக்குகிறார். (சிலப். 10:36-63, 98-101, 153-191) அருகனை அவர் பல்வேறு சொற்களால் இவ்வாறு போற்றியுரைக்கிறார்.

**“அறிவன் அறவோன் அறிவுவரம்பு இகந்தோன்**
**செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்**
**தரும முதல்வன் தலைவன் தருமன்**
**பொருளன் புனிதன் புராணன் புலவன்**
**சினவரன் தேவன் சிவகதி நாயகன்**
**பரமன் குணவதன் பரத்தில் ஒளியோன்**
**தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்**
**சித்தன் பெரியவன் செம்மல் திகழ்ஒளி**
**இறைவன் குரவன் இயல்குணன் எம்கோன்**
**குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்**
**சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்**
**அங்கம் பயந்தோன் அருகன் அருள்முனி**
**பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்**
**விண்ணவன் வேத முதல்வன் விளங்குஒளி’** (சிலப். 10:176- 189)

கவுந்தியடிகள் இதைக் கேட்டுக் கைகூப்பி அவரும் அருகதேவனைப் போற்றி இவ்வாறு கூறுகிறார்.

**“ஒருமூன்று அவித்தோன் ஓதிய ஞானத்**
**திருமொழிக்கு அல்லதுஎன் செவியகம் திறவா**
**காமனை வென்றோன் ஆயிரத்து எட்டு**
**நாமம் அல்லது நவிலாது என்நா**
**ஐவரை வென்றோன் அடியிணை அல்லது**
**கைவரைக் காணினும் காணா என்கண்**
**அருள்அறம் பூண்டோன் திருமெய்க்கு அல்லதுஎன்**
**பொருள்இல் யாக்கை பூமியில் பொருந்தா(து)**
**அருகர் அறவன் அறிவோற்கு அல்லதுஎன்**
**இருகையும் கூடி ஒருவழிக் குவியா**
**மலர்மிசை நடந்தோன் மலர்அடி அல்லதுஎன்**
**தலைமிசை உச்சி தான் அணிப் பொறாஅ(து)**
**இறுதிஇல் இன்பத்து இறைமொழிக்கு அல்லது**
**மறுதர ஓதிஎன் மனம்புடை பெயரா(து)”** (சிலப். 10:192- 208)


http://Creativecommons.org//license/by/4.0/.

அருகனைப் போற்றுமுகமாக இளங்கோ படைத்துள்ள இவ்வரிகள் அவரது சமணச் சார்பைக் காட்டுவதாகச் சிலர் கருதுவர். ஆனால் வேறு சில பாத்திரங்கள் வேறு தெய்வங்களைப் போற்றும் இடங்களிலும் இளங்கோ இவ்வாறே அந்த பாத்திரங்கள் மனம் உருகிப் போற்றுவதை தன் அற்புதமான கவித்திறத்தால் பாடியுள்ளார் என்பதைப் பின்னர்க் காணலாம்.

அவர்கள் காவிரியைக் கடந்து தென்கரை க்குச் சென்று ஒரு பொழிலில் இளைப்பாறுகின்றனர் . அப்போது அங்கு ஒரு வம்பப்பரத்தையும் வறுமொழியாளன் ஒருவனும் வருகின்றனர் . கோவலனையும் கண்ணகியையும் கண்டு, 'காமனும் ரதியும் போன்ற இவர்கள் யார் ?' என்று கவுந்தியடிகளிடம் வினவுகின்றனர் . 'அவர்கள் எம் மக்கள். வழிநடைச்செலவால் களைத்துள்ளனர் . அவர்களிடம் செல்ல வேண்டாம் ' என்று கவுந்தி கூற , 'உடன்பிறப்பாய் தோன்றியவர்கள் கணவன் , மனைவியாய் வாழ்வதும் உண்டோ கற்றறிந்தீரே ' எனக் குறும்பாகக் அவர்கள் கேட்கின்றனர் . இதைக் கேட்டுக் கடும் கோபம் கொண்ட கவுந்தியடிகள் அவர்களை 'முள்ளுடைக் காட்டிடை முதுநரிகள் ஆகுமாறு ' சபித்தார். உடனே அவர்கள் நரிகளாகி ஊளையிட்டனர் . கோவலனும் கண்ணகியும் நடுநடுங்கி அவர்கள் பிழையைப் பொறுக்க வேண்டும் என்றும் சாபவிடை தரவேண்டும் என்றும் கவுந்தியடிகளிடம் வேண்டினர் . அவரும் ஓராண்டு கழிந்தபின் அவர்கள் பழைய வடிவம் பெறுவர் எனச் சாபவிடை தந்தார் (சிலப். 10:216- 245).

இளங்கோவடிகள் கவுந்தியடிகளை மிகுந்த தவவலிமை உடையவராகக் காட்டியிருந்தாலும் இங்கு சமண முனிவருக்கு இருக்க வேண்டிய பொறுமை , சினமின்மை ஆகியவற்றில் குறைந்தவராகவே அவரைக் காட்டியிருக்கிறார்.

**மாங்காட்டு மறையோன்:**

அங்கிருந்து அவர்க ள் உறையூர் செல்கின்றனர் . அங்கு ஒரு சமணப்பள்ளியில் தங்குகின்றனர் . சாரணர் கூறியவற்றை அங்கிருக்கும் சமணத்துறவிகளுக்குக் கவுந்தியடிகள் எடுத்துரைக்கின்றார் . மறுநாள் புறப்பட்டுச் செல்லும் அவர்கள் வழியில் ஒரு சோலையில் தங்குகின்றனர். அப்போது அங்கு ஒரு பார்ப்பனன் பா ண்டியனைப் பற்றிய புராணச் செய்திகளைக் கூறி , பாண்டியனின் பெருமைகளைப் புகழ்ந்துகொண்டு அங்கு வருகிறான் . அவனிடம் கோவலன் நீ யாரென்று வினவ அவன் தன்னைப் பற்றிக் கூறுகிறான் . அவன் சேரநாட்டில் மாங்காடு என்ற ஊரைச் சேர்ந்த மறையவன். திருவரங்கத்திலும் திருவேங்கடத்திலும் உள்ள திருமாலைக் காண வந்ததாக அவன் கூறுகிறான். இப்பகுதியை இளங்கோ நயமுடன் பின்வருமாறு கூறுகிறார்:

**"மாமுது மறையோன் வந்திருந் தோனை**
**யாது நும்மூர் ஈங்கென் வரவெனக்**
**கோவலன் கேட்பக் குன்றாச் சிறப்பின்**
**மாமறை யாளன் வருபொருள் உரைப்போன்**
**நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்**
**பால்விரிந் தகலாது படிந்தது போல**
**ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்**
**பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த**
**விரிதிரைக் காவிரி வியன்பெரு துருத்தித்**
**திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்**
**வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்**
**ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை**
**விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி**
**இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து**
**மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு**
**நன்னிற மேகம் நின்றது போலப்**
**பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்**
**தகைபெறு தாமரைக் கையி னேந்தி**


http://Creativecommons.org//license/by/4.0/.

**நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு**
**பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய**
**செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்**
**என்கண் காட்டென் றென்னுளங் கவற்ற**
**வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்**
**தென்னவன் நாட்டுச் சிறப்புஞ் செய்கையும்**
**கண்மணி குளிர்ப்பக் கண்டே னாதலின்**
**வாழ்த்திவந் திருந்தேன் இதுவென் வரவென"** (சிலப். 11: 31-56)

'திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த கோலத்தையும் திருவேங்கடத்தில் திருமாலின் நின்ற கோலத்தையும் காட்டு என்று என் கண்கள் என் உள்ளத்தை வாட்டுவதால் அவற்றைக் காணவந்தேன் . வழியில் பாண்டியனது நாட்டின் சிறப்பையும் அவனது செயல்களையும் என் கண்மணி குளிரக் கண்டதால் அவனை வாழ்த்தி வந்தேன்' என்று கூறுகிறான் . இங்கும் இளங்கோவடிகள் வேதத்தின் உயர்வைத் தன் கூற்றாகக் கூறியிருப்பது நோக்கத் தக்கது. கோவலன் அவனிடம் மதுரைக்குச் செல்லும் செம்மையான வழியைக் கூறுமாறு கேட்கிறான். மாங்காட்டு மறையோன் அதைத் தெளிவாக விளக்குகிறான் . 'இங்கிருந்து கடுமையான சுரவழியைக் கடந்து சென்று கொடும்பாளூர் நெடுங்குளக் கரையை அடைந்தால் பிறைமுடிக்கண்ணிப் பெரியோனான சிவனின் சூலத்தைப் போல மூன்று வழிகள் பிரியும் . வலப்பக்க வழியில் நீங்கள் சென்றால் நீரற்ற வறண்ட நீண்ட பாதையைக் கடந்தபின் தென்னவன் சிறுமலையை அடையலாம் அங்கு இடப்பக்கப் பாதையில் நீங்கள் சென்றால் மதுரையை அடையலாம். சூலம் போன்ற வழிகளில் இடது வழியில் நீங்கள் சென்றால் வயல்வெளிகளையும் , சோலைகளையும் வறண்ட இடங்களையும் கடந்த பின் திருமாலின் அழகர்மலையை அடைவீர்கள் . அங்கு பில வழி ஒன்று உள்ளது . அதன் வழியே சென்றால் தேவர்கள் போற்றும் வியப்பான மந்திர சக்தி வாய்ந்த மூன்று பொய்கைகளைக் காணலாம் . அவற்றுள் ஒன்றான புண்ணியசரவணத்தில் நீங்கள் குளித்தால் ஐந்திர நூலை உணர்வீர்கள் (அதாவது இலக்கண ஞானம் ஏற்படும் ). பவகாரணி என்ற பொய்கையில் குளித்தால் முற்பிறவி ஞானம் ஏற்படும். இட்டசித்தி என்ற பொய்கையில் குளித்தால் விரும்பியதை அடைவீர் ' என்று கூறிய அவன் அவற்றுக்குச் செல்வது பற்றி விளக்கமாகவும் தெளிவாகவும் கூறுகிறான் . அங்கு தோன்றும் இயக்க மங்கையர் கேள்விகள் கேட்டுப் பரிசோதித்துப் பொய்கைகளுக்கு அனுப்புவதையும் , அரிய வேதத்தில் உள்ள ஐந்தெழுத்து (நமசிவாய), எட்டெழுத்து (ஓம் நமோ நாராயணாய) மந்திரங்களை ஓதி விரும்பிய பொய்கைக்குச் சென்று மூழ்கி பெரும்பயன் அடைவது பற்றியும் விளக்குகிறான் . அவ்விதம் பொய்கைகளில் நீராடாவிட்டால் அழகர்மலைத் திருமால் கோயிலுக்குச் சென்று திருமால் திருவடிகளை வணங்கி இன்பம் பெற்று மதுரைக்குச் செல் லுங்கள் என்றும் கூறுகிறான்.

'அந்த வழியிலும் செல்லாமல் நடுவழியில் நீங்கள் சென்றால் அது செம்மையான வழியாகும் . ஆனால் அந்த வழியில் காட்டில் போகும்போது போவோரை மயக்கி , போகும் வழியை மாற்றிவிடும் வனசாரிணித் தெய்வம் ஒன்று அங்கு உள்ளது . அது வேறு எந்தத் துன்பமும் செய் யாது' எனக் கூறுகிறான். 'ஏற்ற வழியில் நீங்கள் செல்லுங்கள் , நான் நீள்நிலம் கடந்த நெடுமுடி அண்ணல் தாள் தொழுவதற்கு செல்கிறேன் ' என்று கூறுகிறான்.

கவுந்தியடிகள் அவனிடம் , 'நலம்புரி கொள்கை நான்மறையாளனே , பிலம் புக வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. ஒரு கற்ப காலமே ஆயுள் உடைய இந்திரனுடைய இலக்கணப் பொருளை , (தோற்றமும் முடிவும் இல்லாத) அருகன் அருளிய பரமாகத்தில் விளங்கக் காணலாம் . எனவே புண்ணிய சரவணத்தில் யாம் மூழ்க வேண்டியதில்லை. முற்பிறப்பின் பயனை இப்பிறவி நிகழ்ச்சிகள் மூலமே அறியலாம் . எனவே யாம் பவகாரணியில் மூழ்க வேண்டியதில்லை . வாய்மையில் வழுவாது பிற உயிர்களைப் பேணுவோருக்கு அடைய முடியாதது எதுவும் உண்டோ ! எனவே யாம் இட்டசித்தியில் மூழ்க வேண்டியதில்லை ' என்று கூறுகிறார் . சமணத்துறவியான கவுந்தியடிகள் வைதிக முறைப்படி அமைந்த தீர்த்தங்களில் ஆட விரும்பவில்லை என்பது தெளிவு. இப்பகுதியில் இளங்கோவடிகள் தீர்த்தங்களின் சிறப்புகள் , அழகர்மலைத் திருமாலின் சிறப்புகள் ஆகியவற்றையும் ஐந்தெழுத்து, எட்டெழுத்து மந்திரங்கள் பற்றியும் மாங்காட்டு மறையோன் மூலம் உயர்வாகக்


http://Creativecommons.org//license/by/4.0/.

கூறுகிறார். பின் அவர்கள் பயணத்தைத் தொடர்ந்து கொடும்பாளூர் நெடுங்குளம் அடைந்து நடுவழியில் செல்கிறார்கள் (சிலப். 11: 1-165).

**வன சாரிணி:**

அந்த வழியில் பசிய சோலைகளைக் கடந்துச் சென்ற பின் வறண்ட காடு வருகிறது . நீர் வேட்கையால் மூவரும் துன்புற அருகே இருந்த ஒரு குளத்தைக் கோவலன் தேடிச் சென்று நீர் அருந்தப் போகும்போது அந்தக் காட்டில் உள்ள வனசாரிணியான பெண் தெய்வம் கோவலன் மேல் ஆசை கொண்டு வயந்தமாலையின் வடிவம் கொண்டு அவனிடம் செல்கிறது . முன்பு புகாரில் வயந்தமாலை மாதவியின் ஓலையைக் கோவலனிடம் கொண்டுசென்று கொடுத்ததைக் குறிப்பிட்டு , 'தாங்கள் பிரிந்ததனால் மாதவி கண்ணீர் விட்டு மிக வருந்தி தன் முத்துமாலையை அறுத்து வீசியதுடன், 'நான் ஓலையில் எழுதியதில் பிழையில்லை. நீதான் ஏதோ பிழையாகச் சொல்லி அவரைச் சினம் கொள்ள வைத்துவிட்டாய் ' என்று என் மேலும் சினம் கொண்டு எ ன்னை வெறுத்துவிட்டாள். நீங்கள் மதுரைக்குச் செல்வதாகக் கேள்விப்பட்டு உங்களைக் காண நான் வணிகர் கூட்டத்துடன் வந்தேன். நின் மறுமொழி என்ன?' எனக் கேட்கிறாள். வியத்தகு மாங்காட்டு மறையோன் காட்டில் உள்ள தெய்வத்தைப் பற்றிக் கூறியது கோவலன் நினைவுக்கு வர , இது உண்மையா அல்லது மாயமா என்பதை அறிவோம் என நினைத்த அவன் பாய்கலைப்பாவை எனப்படும் கொற்றவையின் மந்திரத்தைக் கூறுகிறான் . அதனால் வெருண்டுபோன அத்தெய்வம் உண்மையைக் கூறி நீங்குகிறது . அவர்கள் தொடர்ந்து காட்டுவழியில் செல்கின்றனர் (சிலப். 11. 166- 200)

**வேட்டுவ வரி:**

வேட்டுவக் குடி யினர் வாழும் வறண்ட ஒரு பகுதியை அவர்கள் அடைகின்றனர் . அங்கு ஒரு ஐயை (கொற்றவை) கோவில் இருந்தது . மழையில்லாத அந்தப் பகுதியில் வேறு வளம் இல்லாததால் அவர்கள் வில்லுடன் வேற்றுப்புலங்களுக்குச் சென்று காளியின் அருளால் வென்று பொருளும் ஆன் நிரைகளும் கொண்டு வருவர். அந்த வெற்றிக்கு விலையாக அவர்கள் கொடுக்கும் பலிக்காக கொற்றவை காத்திருப்பாள் . சோலை சூழ்ந்த அந்த ஐயை கோயிலுக்குச் சென்று , வெயிலின் கடுமையால் வருந்திய கோவலன் முதலியோர் அமர்ந்து இளைப்பாறினர். அப்போது காளிக்கு வழிபாடு செய்யும் உரிமையுடைய சாலினி (தேவராட்டி) தெய்வமேறி மெய்சிலிர்த்து ஆடினாள். 'காளிக்கு நேர்த்திக்கடன் செலுத்தாததால் எயினர் மன்றங்கள் பாழ்பட்டன . பகைவர் மன்றங்களில் ஆன் நிரைகள் பெருகின . மறக்குடி எயினர் சினம் குன்றி அறக்குடி போல் ஆகிவிட்டனர் . கொற்றவை தான் தந்த வெற்றிக்கு விலையாக உயிர்ப்பலி உண்ணாமல் உங்க ள் வில்லுக்கு வெற்றி கொடுக்கமாட்டாள். எனவே கொற்றவையின் கடனைத் தாருங்கள் என்று கூறுகின்றாள்.

எனவே எயினர்கள் தங்கள் முதுகுடியில் பிறந்த ஒரு குமரியை கொற்றவையாக அலங்கரிக்கின்றனர் . சிவனின் வடிவமாகவே அவளை அலங்கரிக்கின்றனர். முடியை சடையாக்கி, அதில் பொன்னால் செய்த பாம்பைச் சூட்டி, பன்றியின் வெண்கொம்பை நிலா போல் சூட்டி , புலித்தோல், யானைத்தோல் ஆகியவற்றை உடையாக்கி , புலிப்பல் மாலை சூட்டி , கையில் வில்லைக் கொடுத்து , கொம்புடைய கலை மேல் அமரவைத்து , குமரி விளையாடக் கூடிய பொருட்களையும் , அலங்காரப் பொருட்களையும் , பல வகை உண வுகளையும், புலால் சோற்றையும் படைத்து, மலர்களும் நறுமணப் புகையும் தந்து , அவர்களின் பறை, கொம்பு, குழல் ஆகியவற்றை முழக்கி, கை தொழுது அக்குமரியின் வடிவில் கொற்றவையை வழிபடுகின்றனர் (சிலப். 12: 1-44). கொற்றவையைக் குறிப்பதற்கு இளங்கோ படைத்துள்ள நயமிக்க வரிகள் பின்வருமாறு:

**"மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி**
**நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்**
**பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி**
**நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து**
**அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்**
**துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி**
**வளையுடைக் கையிற் சூல மேந்தி**
**கரியின் உரிவை போர்த் தணங் காகிய**


http://Creativecommons.org//license/by/4.0/.

**அரியின் உரிவை மேகலை யாட்டி**
**சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி**
**வலம்படு கொற்றத்து வாய்வாள் கொற்றவை**
**இரண்டுவே றுருவில் திரண்டதோள் அவுணன்**
**தலைமிசை நின்ற தையல் பலர்தொழும்**
**அமரி குமரி கவுரி சமரி**
**சூலி நீலி மாலவற் கிளங்கிளை**
**ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்**
**பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை**
**ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை**
**தமர்தொழ வந்த குமரிக் கோலத்து**
**அமரிளங் குமரி....”** (சிலப். 12:54-73)

இதன்பின் கொற்றவையைப் போற்றிப்பாடும் பாடல்களை இளங்கோ விரிவாக அமைத்துள்ளார் . 23 பாடல்களில் 92 வரிகளில் சுவைபட அவற்றை அவர் படைத்துள்ளார் . கொற்றவையைப் பற்றிக் கூறப்படும் கருத்துகளில் குறிப்பிடத் தக்கவற்றைச் சுருக்கமாகக் காண்போம் . கொற்றவை பிறையைத் தலையில் சூடியவள் . இமையாத நெற்றிக்கண் உடையவள். நஞ்சுண்டு கருத்த கண்டம் உடையவள். வாசுகி என்னும் பாம்பை நாணாக்கி மேரு மலையை வில்லாக்கியவள் (திரிபுரம் எரித்த போது). பாம்பைக் கச்சையாக உடுத்தவள். சூலம் ஏந்தியவள். யானையின் தோலைப் போர்த்தி சிங்கத்தின் தோலை மேகலையாகக் கொண்டவள் . இடப்பக்கம் சிலம்பும் வலப்பக்கம் வீரக்கழலும் அணிந்தவள் (அர்த்த நாரீஸ்வரி ). வெற்றி பெரும் வாளேந்திய கொற்றவை. அசுரன் தலை மேல் நின்றவள் . திருமாலின் தங்கை . கொடிய வாளைக் கையில் கொண்டு பாயும் கலையின் மேல் அமர்ந்திருப்பவள். நெற்றிக்கண் கொண்ட சிவனது இடப்பாகத்தை ஆள்பவள் . புலித் தோல் போர்த்து எருமைத் தலை மேல் நின்றவள் , தேவர்கள் வணங்க வேதங்களுக்கும் அப்பாற்பட்ட வே தமாகி ஞானக் கொழுந்தாகி நிற்பவள். வாளால் மகிடாசுரனை அழித்த அவள் சிவன், திருமால், நான்முகன் மூவர் நெஞ்சிலும் விளக்காய் ஒளிர்வாள். சங்கும் சக்கரமும் கைகளிலேந்தி சிங்கத்தின் மேல் நிற்பாள் . கங்கையை முடியில் அணிந்த , நெற்றிக்கண் கொண்ட சிவனது இடப்பாகத்தில் மங்கை உ ருவாக வேதங்கள் போற்ற நிற்பாள் . அசுரர் வாட தேவர்களுக்காக குமரிக் கோலத்தில் நடனம் ஆடியவள். மாயப்போர் செய்த அசுரரை வெல்ல மரக்கால் கொண்டு வாட்போர் செய்தவள் (முன்கூறிய மரக்கால் கூத்து ). முனிவர்களும் தேவர்களும் இந்திரனும் வந்து வணங்கக் கூடியவள். நிரை கவரச்செல்லும் வெட்சி மறவரின் வில் முன்பாகக் கொற்றவையும் செல்வாள். அவள் சென்றால் பகைவர் இடங்களுக்கு ஏற்படும் கேட்டை முன்னறிவித்து அங்கு கரிக்குருவி தன் கொடிய குரலில் கத்தும் . இவ்வாறு கொற்றவை அருளால் பெறப்படும் பசுக்கூட்டங்கள் படைக்கலம் செய்த கொல்லன் , துடி கொட்டுபவன், பாட்டு பாடும் பாணன் , கள் விற்பவள், ஒற்று அறிந்து கூறுபவன் , புள் நிமித்தம் கூறும் கணி ஆகியவர்களின் இல்லங்களில் நிறையும். எயினர் இவ்வாறு எல்லாம் பாடிப் போற்றிய பின் தாங்கள் செலுத்தும் கடனை ஏற்றுக் கொள்ளுமாறு காளியை வேண்டுகின்றனர் . நிணமும், குருதியும் கொண்ட தங்கள் பலியை ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றனர். பின்னர் அரசனை வாழ்த்தி நிறைவு செய்கின்றனர் (சிலப். 12 வேட்டுவ வரி ). பொதுவாக, பழந்தமிழ் இலக்கியங்களில் பெயர் கூறாமல் அவுணன் என்று கூறப்பட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம் . இங்கு இளங்கோ ‘மயிடன்’ என்று மகிஷாசுரனை நேரடியாகக் குறிப்பிட்டுள்ளார்.

**மதுரையை அடைதல்:**

கோவலன், கண்ணகியும் கவுந்தியடிகளும் பயணத்தைத் தொடர்கின்றனர் . பாண்டிய நாடு நெருங்கிவிட்டதால் இனி இரவில் சென்றாலும் எந்தத் துன்பமும் வராது என்று கருதிய அவர்கள் இரவில் நிலவொளியில் நடந்து செல்கின்றனர் . வழியில், வேதம் ஓதுதலை கைவிட்டு வரிப்பாடல்கள் பாடும் தொழிலில் ஈடுபட்ட பார்ப்பனர்கள் வாழும் ஒரு ஊரில் தங்குகின்றனர் . அங்கு மாதவியிடம் இருந்து ஓலை கொண்டுவந்த கௌசிகன் என்ற பிராமண மாணாக்கன் கோவலனைக் கண்டு ஓலை தருகிறான் . கோவலனின் தந்தையும் , தாயும், மாதவியும் படும் துன்பத் தை அவன் எடுத்துரைக்கிறான் . இராமன் காட்டுக்குச் சென்றதனால் அயோத்தி


http://Creativecommons.org//license/by/4.0/.

மக்கள் வருந்தியது போல கோவலன் நீங்கியதால் புகார் நகர மக்கள் வருந்துவதையும் தெரிவிக்கிறான். மாதவியின் மீது தவறில்லை, தன் தீதே இது என உணர்ந்த கோவலன் கௌசிகனிடம் ஓலையை கொடுத்து தன் தந்தைக்கு அனுப்பிவைக்கிறான். பின் அந்தப் பார்ப்பனப் பாணர்கள் துர்க்கையைப் போற்றிப் பாடல் பாடும்போது அதில் கோவலன் கலந்துகொண்டு யாழ் இசைக்கிறான். அவர்களிடம் மதுரை எவ்வளவு தொலைவில் உள்ளது என வினவுகிறான். மலர்களின் மணம், அடுக்களைத் தாளிப்பு மணம் போன்ற பல வகை மணங்களைச் சுமந்துகொண்டு மதுரைத் தென்றல் வருவதைக் காணீர், மதுரை மிகத் தொலைவு அல்ல என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் குறிப்பிடும் மணங்களில் ஒன்று வேள்வி ஆகுதியின் நறுமணம். அன்றும் இரவில் பயணம் தொடர்கின்றனர் (சிலப். 13:1-136). அதிகாலையில் மதுரையை நெருங்கியபோது அருந்தெறற்கடவுள் அகன்பெருங்கோயில் - அதாவது அரிய அழித்தல் தொழிலுக்குரிய சிவபெருமானது அகன்ற பெருங் கோயில் - மன்னனது அரண்மனை இரண்டிலிருந்தும் பலவகை முரசங்கள் முழங்கும் ஒலி கேட்கிறது. நான்மறை அந்தணர் வேதம் ஓதும் ஓசையும், முனிவர் மந்திரம் ஓதும் ஓசையும், வீரர்களும், யானை, குதிரைகளும் பொருநரும் எழுப்பும் ஓசைகளும் கேட்கின்றன. பூக்கள் நிறைந்து வையையாறு தென்படுகிறது. கோவலனும், கண்ணகியும் வையையை வணங்குகின்றனர். பின் மரப்புணை மூலம் வையையைக் கடந்து அறம்புரியும் முனிவர்கள் தவிர பிறர் சேராத ஒரு புறஞ்சேரியில் சென்று தங்குகின்றனர். (சிலப். 13.137-196)

காலையில் பொழுது புலரும்போது நுதல்விழிநாட்டத்து இறையோன் கோயில் (நெற்றிக்கண் கொண்ட சிவபெருமான் கோயில்), கருடக்கொடி கொண்ட திருமால் கோயில், கலப்பைக் கொடி கொண்ட பலராமன் கோயில், சேவல் கொடி கொண்ட முருகன் கோயில், அறவோர் பள்ளிகள் (சமண, பௌத்தப் பள்ளிகள்), மன்னன் அரண்மனை ஆகிய இடங்களில் சங்கும், முரசும் முழங்குகின்றன. கோவலன் கவுந்தியடிகளை வணங்கி தான் மன்னர் பின்னோரை (அதாவது நால்வருணத்தில் மன்னருக்குப் பின்னோரான வணிகர்களை) கண்டுவருவதாகக் கூறிச் செல்கிறான். தன் தீவினைக்காக வருந்தும் கோவலனுக்கு கவுந்தி ஆறுதல் கூறுகிறார். அப்போது கவுந்தி, 'தாதை ஏவலின் மாதுடன் போகி காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன் வேத முதல்வன் பயந்தோன் என்பது நீ அறிந்திலையோ' எனக் கூறுகின்றனர். அதாவது 'வனம் சென்று சீதையைப் பிரிந்து துன்பமுற்ற இராமன் வேத முதல்வனான நான்முகனைப் படைத்த திருமால் என்பதை நீ அறியாயோ' என வினவுகிறார். இந்து தெய்வங்களையும், இந்து புராணச் செய்திகளையும் பொதுவாக, விரும்பாத சமணத் துறவியரில் ஒருவரான கவுந்தி கூட இதுபோல் சொல்வதாக இளங்கோ படைத்துள்ளார். 'நடந்ததை நினைத்து வருந்தாமல் மதுரை நகருக்குச் சென்று பொருந்தமான இடத்தைக் கண்டு திரும்பி வருக' என்று வழியனுப்புகிறார் (சிலப். 14:1-61). முன்பு திருவரங்கத்தில் கோவலன், கண்ணகியைச் சாரணர் கண்டபோது அவர்களின் வருங்காலத்தை சாரணர் உணர்ந்ததைக் கூறிய இளங்கோ, கவுந்தியடிகளை மிகுந்த தவவலிமை உடையவராக காட்டியிருந்தாலும் இங்கு வருங்காலத்தை உணர்ந்தவராகக் காட்டவில்லை.

கோவலன் நகருக்குச் சென்று பல்வேறு வீதிகளையும் பார்க்கிறான். இளங்கோவடிகளின் நீண்ட வர்ணனையில் பருவங்களின் இயல்பும் வர்ணிக்கப்படுகிறது. பின்பனிக் காலத்தை வர்ணிக்கும்போது, 'வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும் பங்குனி முயக்கத்து பனியரசு யாண்டுளன்' என்ற வரிகள் வருகின்றன. பங்குனி முயக்கம் என்பது பங்குனி அமாவாசையில் தொடங்கி 15 நாட்கள் கொண்டாடப்படும் காமன் விழாவாகும். மதுரையில் ஆண்டுதோறும் காமன் விழா கொண்டாடப்பட்டதை இது தெரிவிக்கிறது. இந்திரவிழவூரெடுத்த காதையில் விஞ்சைவீரன் காமன் விழாவைக் கொண்டாடிவிட்டு பின் இந்திர விழாவைக் காண இமயத்தில் இருந்து புகார் வருவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது நினைவுகூரத் தகும். கோவலன் சென்று கண்ட தெருக்களைக் குறிப்பிடும்போது, பால்வேறு தெரிந்த நால்வேறு வீதியும் என்று இளங்கோ கூறுகிறார். இதன் பொருள் நான்குவகையாகப் பிரிக்கப்பட்ட வேறுபாடு உடைய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்போர் குடியிருக்கும் வீதிகள் என்பதாகும். கோவலன் மதுரை நகரின் பல வீதிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்புகிறான் (சிலப். 14:62-218)

**மாடல மறையோன்:**


http://Creativecommons.org//license/by/4.0/.

கோவலன் கவுந்தியிடம் தான் கண் டதை எல்லாம் கூறிக்கொண்டிருக்கும் போது அங்கு மாடலன் என்ற பார்ப்பனன் வருகிறான் . இந்த மாடலனைச் சிலப்பதிகாரத்தில் மிக முக்கியமான ஒரு சிறந்த பாத்திரமாக இளங்கோ படைத்துள்ளார். மாடலனை இளங்கோ அறிமுகம் செய்யும் வரிகள் பின்வருமாறு:

**“தாழ்நீர் வேலித் தலைச் செங்கானத்து**
**நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை**
**மாமறை முதல்வன் மாடலன் என்போன்**
**மாதவ முனிவன் மலைவலங் கொண்டு**
**குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து**
**தமர்முதற் பெயர்வோன் தாழ்பொழி லாங்கண்**
**வகுந்துசெல் வருத்தத்து வான்றுயர் நீங்கக்**
**கவுந்தி இடவயிற் புகுந்தோன் தன்னைக்**
**கோவலன் சென்று சேவடி வணங்க**
**நாவல் அந்தணன் தான்நவின் றுரைப்போன்”** (சிலப். 15:11-20)

தலைச்செங்கானம் என்ற ஊரைச் சேர்ந்த , நான்கு வேதங்களும் முற்றக் கற்ற , நலம்புரி கொள்கையுடைய, உயர்ந்த மறையவர்களின் தலைவனான மாடலன் என்போன் அகத்திய முனிவனது பொதிய மலையை வலங்கொண்டு வணங்கி, குமரிப் பெருந்துறையில் முறைப்படி நீராடி தன் ஊருக்குத் திரும்புபவன் வழிநடைக் களைப்பால் கவுந்தி இருந்த பள்ளிக்கு வந்தான் . அவனைக் கண்ட கோவலன் அவன் திருவடிகளை வணங்கினான். அப்போது கோவலனை ஏற்கனவே அறிந்த அந்த நாவல் (நயம்படப் பேசும் வன்மை மிக்க ) அந்தணன் கோவலனைப் பற்றிய பழைய செய்திகளைக் கூறுகின்றான்.

மணிமேகலை பிறந்து அவளது பெயர் சூட்டு விழா நடத்திய போது கோவலன் மழை போல் பொன்னை தானமாக வழங்கினான். அப்போது அதைப் பெறுவதற்காக ஞானத்திலே உயர்ந்த , ஒரு மிகவும் முதிய , உடல் வளைந்த பார்ப்பனன் தளர்ந்த நடையுடன் தண்டு ஊன்றி வந்தான். அவனை மதம் பிடித்து வந்த யானை பிடித்துக் கொண்டது. கோவலன் பாய்ந்து சென்று பார்ப்பனனை விடுவித்து மதயானையின் கொம்பை பிடித்து மத்தகத்தில் ஏறி யானையை அடக்கினான். இதைக் கூறிய மாடலன் கோவலனைக் கருணை மறவன் என்று புகழ்கிறான்.

தன் குழந்தையைக் காத்துவந்த கீரிப்பிள்ளை அங்கு வந்த பாம்பைக் கொன்று இரத்தம் ஒழுகும் வாயுடன் நிற்பதைக் கண்ட ஒரு பார்ப்பினி, தன் குழந்தையை அது கடித்துவிட்டதாக நினைத்து கோபத்தில் அதை அடித்துக் கொன்றுவிட்டாள். இதை அறிந்த அவள் கணவன் அவளைச் சினந்து பேசி (பாவம் நீங்க) கங்கையாடச் சென்றான். அவனை அவள் பின்தொடர்ந்தாள். ‘இத்தகைய பாவம் செய்த உன்னுடன் நான் வாழ முடியாது ’ என்று அவன் கூறி வடமொழி வாசகம் அடங்கிய ஒரு ஏட்டை அவளிடம் கொடுத்து , தகுந்தவரின் இதைக் கொடுத்து உன் பாவத்தைப் போக்கிக் கொள் எனக் கூறிச் சென்றுவிட்டாள் . தெருவில் அந்த ஏட்டுடன் சென்ற அவளைக் கோவலன் அழைத்து நிகழ்ந்ததை அறிந்து வேத சாத்திர நூல்களின் முறைப்படி அவள் பாவம் போக , தானம் புரிந்து அவள் கணவனையும் சேர்த்து வைத்தான்.

கற்பில் சிறந்த பத்தினி ஒருத்தி பொய்ப்பழி எய்துமாறு , அவள் கணவனிடம் அறிவற்ற ஒருவன் பொய்சாட்சி சொல்ல, புகார் நகரின் சதுக்க பூ தம் அவனைப் பாசத்தால் கட்டிக் கொல்லச் சென்றபோது , அவனது தாய் பட்ட துன்பத்தைக் கண்டு மிகவும் வருந்திய கோவலன் சதுக்க பூதத்திடம் சென்று ‘என் உயிர் கொண்டு அவன் உயிரைத் தா ’ எனக் கேட்க , அப்பூதம், ‘நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு பரகதி இழக்கும் பண்பு ஈங்கில்லை’ என்று கூறி அவனைக் கொன்று தின்றுவிட்டது . வருந்திய கோவலன் அவன் தாய்க்கும் சுற்றத்தாருக்கும் பொருள் கொடுத்து உதவி அவர்கள் பசிப்பிணியை பல காலம் போக்கிக் காத்தான்.

இவற்றை எல்லாம் குறிப்பிட்ட மாடலன் , ‘கோவலனே, நான் அறிந்தவரை நீ இப்பிறப்பில் செய்தவை யாவும் நல்வினை களே. திருமகள் போன்ற மாணிக்கத் தளிரான உன் மனைவியுடன் இவ்வாறு நீ துயர் உறுவதற்குக் காரணம் உன் முன்வினைப் பயனோ !’ என்று இரங்கிக் கூறினான் . அப்போது கோவலன் அதிகாலையில் தான் கண்ட கெட்ட கனவினை மாடலனுக்குக் கூறுகிறான் . ‘பாண்டியனின் நகரில் ஒரு கீழ்மகன் காரணமாக, கண்ணகி நடுங்கித் துடிக்குமாறு , எனது உடைகள் அகற்றப்பட்டு நான் எருமைக்கடாவின் மேல்


http://Creativecommons.org//license/by/4.0/.

செல்லவைக்கப்படுகிறேன். இருவரும் துறவிகள் அடையும் இடத்திற்கு செல்கிறோம் . காமன் மலர் அம்புகளை வீசி எறிந்துவிட்டு கையற்று ஏங்க மணிமேகலை மாதவியை புத்த அறவோனிடம் கொடுக்கிறாள் . இவ்வாறு கனவு கண்டேன்' எனக் கோவலன் கூறுகிறான்.

அதன்பின், 'முனிவர்கள் மட்டுமே இருக்கக் கூடிய இந்த இடம் உங்களுக்குப் பொருத்தமானது அன்று . எனவே நீங்கள் இரவுக்குள் மதுரை நகருக்குள் சென்று தங்குங்கள். மன்னர் பின்னோர் (வணிகர்) உன்னை அறிந்து ஏற்பர்' என்று கவுந்தியடிகளும் மாடலனும் கோவலனிடம் கூறுகின்றனர். அப்போது அங்கு மாதரி என்ற இடையர் குல முதியவள் புறஞ்சேரியில் உள்ள ஒரு இயக்கித் தெய்வத்துக்குப் பால்சோறு படைத்துவிட்டுத் திரும்புகிறாள் . அவள் கவுந்தியடிகளைக் கண்டவுடன் வணங்குகிறாள் . அவளிடம் கண்ணகியை அடைக்கலமாக ஒப்படைத்தல் நல்லது என்று முடிவெடுத்த கவுந்தியடிகள் அவ்வாறே ஒப்படைக்கிறார் . அப்போது முன்பு ஒருமுறை புகாரிலே சாரணர் அறவுரை ஆற்றும்போது அங்கு தோன்றிய தேவனின் கதையை எடுத்துக்கூறி அடைக்கலத்தைப் பாதுகாப்பதன் சிறப்பையும் தானத்தின் சிறப்பையும் எடுத்துக்கூறி மாதரியிடம் கோவலன் கண் ணகியரை அடைக்கலமாகத் தருகிறார் . கோவலன், கண்ணகியரை அழைத்துக் கொண்டு மாதரி மதுரையின் மதிலுக்கு உள்ளே சென்று தன் வீட்டை அடைகிறாள் (சிலப். 14.1-219).

கோவலன் கண்ணகியரை ஒரு தனி மனையில் இருத்திய மாதரி தன் மகள் ஐயையைக் கண்ணகிக்குத் துணையாக இருக்கச் செய்தாள் . கோவலன் 'சாவக நோன்பிகள் என்பதால் முறைப்படி தனியாகச் சமைக்க கலன்கள் தருக ' என கண்ணகி மாதரியிடம் வேண்டினாள் . அவளும் அவ்வாறே மட்கலங்கள் காய் வகைகள் அரிசி முதலியவற்றையும் தந்தாள். கண்ணகி உணவு சமைத்து கோவலனுக்குப் பரிமாறினாள் . அரிய வேதத்தில் மன்னர் பின்னோருக்கு (வணிகருக்கு) விதிக்கப்பட்டவற்றை (வாய்பூசல், தெய்வங்களுக்குப் பலியிடல் முதலியவை) கோவலன் ஒருவாறு செய்து பின் உணவருந்தினான்.

இங்கு கோவலனைக் கண்ணகி 'சாவக நோன்பிகள்' என்றது ஆராயத் தக்கது . சாவகர் என்போர் சமண சமயத்தைச் சேர்ந்த இல்லறத்தோர் . கோவலன், கண்ணகி திருமணம் வைதிக முறைப்படி நடைபெற்றதால் அவர்கள் அப்போது வைதிக இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருந்தனர் என்பது தெளிவு . புகாரைவிட்டு புறப்பட்டு வரும்போது அவர்கள் திருமால் கோயிலை வலம்வந்து வணங்கினர் . பின் வனசாரிணி வந்தபோது கோவலன் துர்க்கையின் மந்திரத்தை ஓதினான். எனவே இந்து சமயத்தினனான கோவலன் கவுந்தியடிகளின் உரைகளினால் ஈர்க்கப்பட்டுச் சமண இல்லறத்தானாக வாழ முடிவு செய்துவிட்டான் என்பதை உய்த்துணர முடிகிறது

மாதரியும் ஐயையும் கோவலனையும் , கண்ணகியையும் பார்த்து இந்த நம்பி ஆயர்பாடியின் கண்ணன்தானோ, இந்த நங்கை முன்பு நம் குலத்தில் தோன்றிய நப்பின்னைதானோ என்று வியக்கின்றனர் . பின் கோவலன் தான் செய்த பிழையை நினைத்து மிகவும் மனம் வருந்தி கண்ணகியிடம் , 'இவ்வாறெல்லாம் நான் செய்த போதிலும் புறப்படு என்று நான் சொன்னவுடன் நீ புறப்பட்டுவிட்டாயே , உன் செயல் எத்தகையது !' என இரங்கிக் கூறுகிறான். அதற்குக் கண்ணகி,

**"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை…"** (சிலப். 16:71-73)

என்று தன் நிலையைக் கூறி , 'தன் துன்பத்தை காட்டாமல் நடந்து கொள்கிற என்னைக் கண்டு நின் தந்தையும் தாயும் என் மீது பெரிதும் அன்புகொண்டு என்னைப் பாராட்டுவர் . ஆனால் என் பொய்யான புன்முறுவல் என் உள்ளத்து வேதனையை அவர்களுக்குக் காட்டிவிடுவதால் அவர்கள் பெரிதும் மனம் வருந்துவர் . இவ்வாறு பெரியோர் போற்றா ஒழுக்கத்தை நீங்கள் கடைப்பிடித்தாலும் உங்கள் சொல்லை என்றும் மாற்றாத வாழ்க்கையை உடையவள் நான் என்பதால் புறப்படச் சொன்னதும் புறப்பட்டேன் ' என்று கண்ணகி கூறினாள் . பின் கோவலன் கண்ணகிக்காக மிக வருந்தி அவளிடம் அன்பு மொழிகளைக் கூறி சிலம்பை விற்றுவரப் புறப்படுகின்றான் . திமிலுடைய காளை ஒன்று அவனை எதிர்த்து அவன் மேல் பாயவந்தது . இது தீ நிமித்தம் என்று இடையர் குலத்தினருக்குத் தெரியும். கோவலனுக்கு அது தெரியாததால் அதைப் பொருட்படுத்தாமல் சென்றான் .(சிலப். 26.1-104) அங்கு அரசியின் சிலம்பைத் திருடியதாகக் கொலை செய்யப்பட்டான்.

**ஆய்ச்சியர் குரவை:**


http://Creativecommons.org//license/by/4.0/.

அச்சமயம் ஆயர்சேரியில் பல தீய நிமித்தங்கள் தோன்றுகி ன்றன. அவற்றைக் கண்டு கலங்கிய மாதரி , ‘முன்பு கண்ணன் தன் அண்ணன் பலராமனோடு ஆடிய பால சரிதை நடனங்களில் நப்பின்னையோடு ஆடிய குரவைத் கூத்தை நாம் ஆடிப் பாடி , கண்ணனைப் போற்றுவோம்; அதனால் நம் பசுக்களுக்கு வரும் துன்பம் வராமல் நீங்கும்‘ என்று கூறி குரவைக் கூத்தை நிகழ்த்த முடிவு செய்கிறாள். ஏழு இளம்பெண்களை குரல், துத்தம் முதலிய ஏழு சுரங்கள் போல் நிற்கவைத்து குரல் எனப்பட்டவளைக் கண்ணன் என்றும் துத்தம் எனப்பட்டவளை நப்பின்னை என்றும் இளி எனப்பட்டவளை பலராமன் என்றும் மற்றவர்களை மற்ற கோகுலத்துப் பெண்களாகவும் கொண்டு குரவைக்கூத்து நிகழ்த்தவைக்கிறாள். அவர்கள் கைகோர்த்து ஆடிப் பாடி, கண்ணனைப் போற்றுகின்றனர். அக்காலத்தில் ஏற்பட்டிருந்த இசைத்தமிழின் வளர்ச்சியை இப்பகுதி காட்டுகிறது . எண்பதுக்கும் மேற்பட்ட வரிகளில் பல வித இசைவடிவங்களில் அவர்கள் கண்ணனைப் போற்றிப் பாடுவதாக இளங்கோவடிகள் அமைத்திருக்கிறார். கண்ணன் செய்த செயல்கள் பல போற்றிப் பாடப்படுகின்றன.

கண்ணன் ஆநிரை மேய்த்தது; கன்றைக் குறுந்தடி ஆக்கி கனியை உதிர்த்தது; மேரு மலையை மத்தாக்கி வாசுகி என்ற பாம்பைக் கயிறாக்கி திருமால் பாற்கடலைக் கடையவைத்தது ; யமுனை ஆற்றில் கண்ணன் நப்பின்னையின் துகிலை ஒளித்தது; குருந்த மரத்தை ஒடித்தது; ஞாயிற்றை தன் சக்கரத்தால் மறைத்தது; அவன் கருடனை வாகனமாகக் கொண்டது ; உலகங்கள் எல்லாம் திருமாலின் நாபிக்கமலத்தில் இருந்து தோன்றியது ; கண்ணன் வெண்ணெய் திருடியது ; யசோதை கயிற்றால் கட்டியது ; அவன் உலகம் அனைத்தையும் வாயால் உண்டது; மூவடியால் திருமால் உலகங்களை அளந்தது ; அவன் துளசி மாலை அணிந்தது ; பாண்டவர்களுக்காக கண்ணன் தூதனாகச் சென்றது ; சோ என்ற அசுரர் நகரைக் கண்ணன் அழித்தது ; கம்சன் செய்த வஞ்சகச் செயல்களை வென்றது ; நரசிம்மமாய் திருமால் இரணியனை அழித்தது ; இராமனாக அவதரித்து இலங்கையை வென்றது முதலிய புராணச் செய்திகள் இந்த இசைப் பாடல்களில் கூறப் பெற்றுள்ளன . நப்பின்னையின் இசையைப் புறங்காக்கின்றவர் முதிய வேதத்தில் தேர்ச்சி பெற்று பழைமையான இசைநூல் முறைப்படி வீணை மீட்டுகிற நாரதர் என்று இங்கு இளங்கோ குறிப்பிடுகிறார். நாரத முனிவர் இசை நூலை இயற்றினார் என்பது மரபு. வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்றான சிட்சை என்பது எழுத்து ஒலிகளைப் பற்றியது . அதில் தேர்ந்த நாரதர் இயற்றிய நாரத சிட்சையே இசைநூல் என்பது அடியார்க்கு நல்லார் விளக்கத்தால் அறியமுடிகிறது [12]. நப்பின்னையின் பாட்டு நாரதரின் இசை இலக்கணப்படி அமைந்திருந்தது என்பது இங்கு கருத்து.

ஆய்ச்சியர் குரவையில் கடைசியாக அமைந்துள்ள பின்வரும் பாடல்கள் பக்திச் சுவை மிக்கவை

**“மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்**
**தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து**
**சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த**
**சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே**
**திருமால்சீர் கேளாத செவி என்ன செவியே**
**பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்**
**விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்**
**திருவடியும் கையும் திருவாயும் செய்ய**
**கரியவனைக் காணாத கண்ணென்ண கண்ணே**
**கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே**
**மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்**
**கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்**
**படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே**
**நாராயணா வென்னா நாவென்ன நாவே’** (சிலப். 16.ஆய்ச்சியர் குரவை)

**மதுரையை எரித்தல்:**

கோவலன் கொலையுண் ட செய்தி அறிந்து பொங்கி எழுந்த கண்ணகி பாண்டியனிடம் சென்று வழக்காடுகிறாள். அப்போது வாயிலில் வந்து நின்ற கண்ணகியின் தோற்றத்தை மன்னனிடம் வாயிற்காப்போன்


http://Creativecommons.org//license/by/4.0/.

இப்படிக் கூறுகிறான். 'கணவனை இழந்த ஒருத்தி கையில் சிலம்புடன் நிற்கிறாள். பொங்கும் சினத்துடன் கொல்பவள் போல நிற்கிறாள். அவள் மகிடாசுரனது இரத்தம் ஒழுகும் வெட்டிய தலைமேல் ஏறி நின்ற கொற்றவையும் அல்லள்; சப்த கன்னியரில் அறுவர்க்கு இளையவளான பிடாரியும் அல்லள். தாருகாசுரனது நெஞ்சைப் பிளந்த துர்க்கையும் அல்லள் (ஆனால் அவர்கள் போல் இருக்கிறாள்)' என்று கூறுகிறான். கண்ணகி பாண்டியன் முன் சென்று வழக்குரைத்து தன் கணவன் கள்வன் அல்ல என்பதை நிறுவுகிறாள். பாண்டியன், 'யானோ அரசன். யானே கள்வன்' என்று கூறி உயர் விடுகிறான். 'கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்' என்று கூறி அரசியும் உயிர் துறக்கிறாள். (சிலப். 20. 24-81). சினம் அடங்காத கண்ணகி மதுரை எரிகவெனக் கூறி தன் இடது முலையைத் திருகி எறிகிறாள். அப்போது அக்கினி தேவன் ஒரு பார்ப்பனனின் வடிவில் கண்ணகி முன் தோன்றி தீயால் எரிக்கும்போது எவர் எவரை விட்டுவிட வேண்டும் என்று கண்ணகியைக் கேட்கிறான்

**"பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்**
**மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்**
**தீத்திறத்தார் பக்கமே சேர்க..."** (சிலப். 21:53-55)

என்று கண்ணகி கூறுகிறாள். தீ மதுரை எங்கும் பரவுகிறது. காவல் தெய்வங்கள் நகரைவிட்டு நீங்குகின்றன. மதுரை நகரிலே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகை வருணத்துக்கும் உரிய நான்கு பூதங்கள் இருந்தன. இவையும் நகரைவிட்டு நீங்குகின்றன. வருணங்களின் அடிப்படையில் இந்த பூதங்கள் கொண்டுள்ள தோற்றத்தை இளங்கோவடிகள் வர்ணித்துள்ளார். கோவில்களில் அந்தி பூசையும் வேதம் ஓதுதலும் ஓமம் செய்தலும் தெய்வங்களைப் போற்றுவதும் வீடுகளில் விளக்கேற்றி தெய்வங்களை வணங்குவதும் அன்று மதுரை மாநகரில் நடைபெறவில்லை. தீயின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் மதுரை நகருக்கு உரிய மதுராபதித் தெய்வம் கண்ணகியின் முன் வந்து தோன்றுகிறது (சிலப். 22. 1-157).

மதுராபதித் தெய்வத்தை இளங்கோவடிகள் உமையின் அர்த்தநாரீஸ்வரி வடிவமாகவே காட்டியுள்ளார். அவள் சடைமுடியில் பிறை நிலவை அணிந்துள்ளாள். இடது புறம் இருண்ட நீல நிறமும் வலது புறம் பொன்னிறமும் உடையவள். இடது கையில் தாமரைப்பூவும் வலது கையில் மழுவாளும் கொண்டவள். இடது காலில் சிலம்பும் வலது காலில் வீரக்கழலும் அணிந்தவள். பாண்டியர் குலத்தினை தொன்று தொட்டுக் காக்கும் உரிமை உடையவள். வழக்குரை காதையின் இறுதியில் உள்ள வெண்பாவில் திருமகளும், நாமகளும், கொற்றவளும் ஆகிய மூவரையும் படைத்தவள் மதுராபதியாகக் கண்ணகியிடம் வந்தாள் என்று இளங்கோ கூறியுள்ளார். இவ்வாறு அம்பிகை எனவும் பாண்டிய குலத்தினைக் காப்பவள் எனவும் மதுராபதி கூறப்பட்டுள்ளதால் அவள் மீனாட்சியம்மையே என்று உணரலாம்.

பாண்டியன் அறநெறி தவறாதவன் என்றும் ஊழ்வினை காரணமாகவே இவ்வாறு நடந்தது என்றும் மதுராபதி விளக்குகிறாள். பாண்டியன் 'மறைநா ஓசை அல்லது யாவதும் மணி நா ஓசை கேட்டலும் இலனே' என்கிறாள். அதாவது வேதம் ஓதும் ஒலியன்றி முறையிட வருவார் ஒலிக்கும் ஆராய்ச்சி மணியின் ஒலியைக் கேட்டதில்லை என்கிறாள். பாண்டியர் மரபில் முன்னோனான பொற்கைப் பாண்டியன் கதையைக் கூறி, ஐயைக் கோவில் கதவு மூடிக் கொண்ட வரலாற்றையும் கூறுகிறாள்.

சோழ நாட்டில் உயர்ந்து விளங்கிய பராசரன் என்ற பார்ப்பான் பாலைக் கௌதமனார் என்ற புலவரை சுவர்க்கம் செல்லவைத்த சேரனைக் காணச் சென்று பார்ப்பனர் திறத்தை விளக்கிக் கூறி வேறு கருத்து உடையவர்களிடம் வாதம் செய்து வெற்றிபெற்று பார்ப்பன வாகை சூடி பரிசுகள் பெற்று தன் ஊர் திரும்பினான். பார்ப்பனர் திறத்தை இளங்கோவடிகள் இவ்வாறு கூறுகிறார்.

**"ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்**
**முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி**
**ஐம்பெரு வேள்வியுஞ் செய்தொழில் ஓம்பும்**
**அறுதொழி லந்தணர் பெறுமுறை வகுக்க"** (சிலப். 23:67-70)

(ஒன்றுபுரி - ஒன்றான பரம் பொருளை விரும்புதல். இருபிறப்பு - உபநயனத்துக்கு முன்பும் பின்பும் என இருபிறப்பு. முத்தீ - காருகாபத்தியம், ஆகமனீயம், தட்சிணாக்கினி என்ற ஓமத்தீ மூன்று. ஐம்பெரும் வேள்வி - பித்ரு யஞ்ஞம், தேவ யஞ்ஞம், அதிதி யஞ்ஞம், பூத யஞ்ஞம், ஆத்ம யஞ்ஞம் என்ற பஞ்ச மகா யஞ்ஞம்


http://Creativecommons.org//license/by/4.0/.

**VOLUME – III** **ISSUE - II**

**FEB – 2026** **E-ISSN : 2584 – 1238**

[முறையே தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், பிற உயிர்கள், தான் என்ற ஐந்தையும் பேணுதல்]. அறுதொழில் - வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல்)

பராசரன் வழியில் திருத்தங்கால் என்ற பார்ப்பன ஊரில் தன் பொருட்களை வைத்துவிட்டு ஓய்வெடுத்தான். அங்கு விளையாடக் கொண்டிருந்த சிறுவர்களை அவன் அழைத்து , என்னோடு வேதமோதி பரிசுகள் பெறுங்கள் என்று கூறினான். அச்சிறுவர்களில் ஒருவன் ஆலமர்ச் செல்வனின் பெயரை (தக்கிணாமூர்த்தி) கொண்டவன்; வார்த்திகன் என்பவனின் புதல்வன் . அவன் மழலை மாறாத திருந்தாத நாவை உடையவன் என்றாலும் வேதத்தைப் பிழையின்றி பராசரனுக்கு ஒப்பாக ஓதினான் . அதனால் மிகவும் வியந்துபோன பராசரன் தக்கிணனுக்கு விலையுயர்ந்த பல அணிகலன்களைப் பரிசாக வழங்கிவிட்டு தன் ஊருக்குச் சென்றான் . தக்கிணன் உயர்ந்த அணிகலன்களை அணிந்திருப்பதைப் பொறுக்காத ஊர்க்காவலர் அரச சட்டத்துக்கு மாறாக வார்த்திகன் புதையலைக் களவு செய்துவிட்டான் என்று கூறி அவனைச் சிறையில் இட்டனர் . அவன் மனைவி கார்த்திகை நிலத்தில் விழுந்து புரண்டு வெகுண்டு தெய்வத்திடம் முறையிட்டாள் . அதனால் மதுரையில் உள்ள ஐயை கோவிலின் கதவை ஐயை மூடிக் கொண்டாள் . யாராலும் அதைத் திறக்க முடியவில்லை . பாண்டியன் இதை அறிந்து என் செங்கோல் தவறி கொடு ங்கோல் ஆகும்படி எதுவும் நடந்துவிட்டதோ என ஐயுற்று வினவ , காவலர் வார்த்திகனைச் சிறையில் அடைத்ததைக் கூறினர் . காவலர்களைக் கடிந்து கொண்ட அரசன் வார்த்திகனை விடுதலை செய்து, 'அறிவில்லாத காவலரின் முறையற்ற செயலால் என் அரசநீதி பிழையாகிவிட்டது ; பொறுக்க வேண்டும்' என்று கூறி திருத்தங்காலுடன் வயலூர் என்ற ஊரையும் வார்த்திகனுக்குக் கொடுத்து அவன் முன் தரையில் விழுந்து வணங்கினான் . உடனே கொற்றவை கோயிலின் கதவு பெரும் ஒலியுடன் திறந்தது . இதைக் கூறிய மதுராபதித் தெய்வம் , மதுரை இந்நாளில் தீக்கிரையாகும் என்று ஏற்கனவே கூறப்பட்ட சோதி ட வாக்கையும், கோவலன் முற்பிறப்பில் செய்த தீவினையையும் கூறி 'பதினான்கு நாட்கள் கழித்து நீ கோவலனை தேவ வடிவில் காண்பாய் ' என்று கூறி மறைகிறது . கண்ணகி மிக்க துன்பத்துடன் தன் நினைவு அற்றவளாய் மேடு, பள்ளம் பாராமல் மேற்குத் திசையில் வையைக் கரையில் நடந்து சென்று சூ ரனை அழித்த வேலனின் குன்றான திருச்செங்குன்றில் ஏறி ஒரு வேங்கை மரத்தடியில் நிற்கின்றாள் . அன்று பதினான்காம் நாள் கழிந்தது என்பதை அவள் உணர்ந்து கணவனை வாழ்த்தி வணங்க , தேவர்கள் கோவலனுடன் வந்து கண்ணகி மேல் வாடாத மலர்களைத் தூவி , குன்றக் குரவர் கண்டு நிற்கும் போதே வானூர்தியில் அவளை சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல்கின்றனர் (சிலப். 23. 1-200, 24:1-9).

**குன்றக்குரவை:**

இதைக் கண்டு வியந்த குன்றக் குரவர் இப்படி ஒரு தெய்வத்தை நாம் கண்டதில்லை , இவளை நம் குல தெய்வமாகக் கொண்டு போற்ற வேண்டும் என முடிவு செய்கின்றனர் . தங்கள் மலை வள ம் பெருக வேண்டும் என வேண்டி கண்ணகித் தெய்வத்தை வணங்கிப் போற்றி , இசைக் கருவிகள் முழங்க , பூக்கள் தூவி , நறுமணம் ஊட்டி, குரவைக் கூத்தை ஆடிப் பாடுகின்றனர் . குரவைக் கூத்தில் , காதல் கொண்ட தலைவியும் , அவளது தோழியும் பாடுவது போன்ற அகத்திணைப் பாடல்களின் இடையே முருகனை ப் போற்றியும் , கண்ணகியைப் போற்றியும் பாடுகின்றனர் . பிறகாலத்தில், காதல் பாடல்களில் பக்தியை ஊட்டும் திருக்கோவையார் போன்ற இலக்கியங்களுக்கு முன்னோடியான பாடல்களில் ஒன்றாக குன்றக் குரவை அமைந்துள்ளது.

முருகனைப் பற்றிய பல செய்திகள் இக்கூத்தில் பாடப்படும் பாடல்களி ல் உள்ளன . முருகன் கடலுள் மாமரமாய் நின்ற சூரனை வேலால் கொன்றவன் . திருச்செந்தூரிலும், திருச்செங்கோட்டிலும், வெண்குன்றத்திலும், ஏரகத்திலும் நீங்காமல் நிற்கும் முருகனுடைய வேல் முன்னொரு காலத்தில் மரமாகி நின்ற சூரனைக் கொன்ற சுடர்வேல். அவன் ஆறு முகங்களும் பன்னி ரு கைகளும் உடையவன் . பிணிமுகம் என்ற மயில் மேல் ஏறி தேவர்களின் அரசனான இந்திரன் போற்றும்படி அசுரனை அழித்தவன் . கிரவுஞ்ச மலையாக நின்ற அசுரனின் நெஞ்சைப் பிளந்த நெடிய வேல், சரவணப் பொய்கையில் தாமரை மலர்ப் படுக்கையில் தாயார் அறுவரின் பாலை உண்ட முருகனின் வேலே . அவன் ஆல் அமர்ச் செல்வனாகிய சிவனது மகன் ; கயிலை மலையில் உள்ள இறைவனான சிவனின் மகன் ; மலையரசன் மகளாகிய உமையின் புதல்வன் ; குறவர் குலத்து வள்ளியை மணந்தவன். இவ்வாறெல்லாம் முருகனைப் போற்றிப் பின் கண்ணகியையும் போற்றி பின் சேரனைப் போற்றி கூத்தை முடிக்கின்றனர் (சிலப். 24. குன்றக்குரவை).


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

**சேரன் செங்குட்டுவன்:**

சேர அரசன் செங்குட்டுவன் மலை வளம் காண அரசியோடும் மற்றவர்களோடும் அரண்மனையில் இருந்து வருகிறான். பேரியாற்றுக் கரையில் தங்குகிறான். பெரிய மலையைக் குறுக்கிட்டுச் செல்லும் அந்த ஆறு திருமால் மார்பில் விளங்கும் ஆரம் போல் இருந் தது என்று இளங்கோ வர்ணிக்கிறார். குன்றக் குரவர் மலையில் கிடைக்கும் பலவகைப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு வந்து அரசனிடம் தந்து அவனைக் காண்கின்றனர் . அப்போது கண்ணகியைப் பற்றியும் அவர்கள் கூறி அவள் யாரென்று தெரியவில்லை எனக் கூறுகின்றனர் . அங்கு இருந்த தமிழ்ப் புலவர் சாத்தனார் தனக்கு அது தெரியும் என்று கூறி அனைத்தையும் விளக்கிக் கூறுகிறார் . தன் நாட்டுக்கு வந்து தெய்வமான கண்ணகிக்குக் கோயில் கட்ட சேரன் விரும்பி இமயத்தில் கல் எடுத்து சிலை செய்து கங்கையில் நீராட்ட முடிவு செய்கிறான் . இமய அரசன் கல் தர மறுத்தால் தன் வாளின் வன்மையை அவனுக்குக் காட்டுவேன் என்று பொருள்பட வஞ்சினம் கூறுகின்றான். அப்போது இமயமலையில் உள்ள பிராமண இருடிகளை (ரிஷிகள்) இவ்வாறு செங்குட்டுவன் கூறுவதாக இளங்கோ குறிப்பிடுகிறார்.

“**புன்மயிர்ச் சடைமுடிப் புலரா வுடுக்கை**
**முந்நூல் மார்பின் முத்தீச் செல்வத்து**
**இருபிறப் பாளரொடு பெருமலை யரசன்**
**மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்**
**கடவுள் எழுதவோர் கல்தா ரானெனின்**” (சிலப். 25: 126-130)

அதாவது சிவந்த சடைமுடியும், ஈரம் புலராத ஆடையும், பூணூல் அணிந்த மார்பும், முத்தீ என்ற மூன்று ஓமச் செல்வமும் கொண்ட இருபிறப்பாளர்களான (உபநயனம் பெற்றபின் இரண்டாவது பிறப்பு அடைபவர்கள்) பிராமண முனிவர்கள் வாழும் இமயமலை அரசன் கல் தர மறுத்தால் தன் வன்மையைக் காட்டுவேன் என்று சேரன் சூளுரைக்கிறான் (சிலப்.25: 1-149). மேலும் வடநாட்டு வேந்தர் சிலர் தமிழ்நாட்டு வேந் தரின் வீரத்தை இகழ்ந்து கூறினர் என்று கேள்விப்பட்ட செங்குட்டுவன் பெரும்படையோடு வடநாடு செல்ல முடிவு செய்கிறான் . அப்போது 12 திங்களிலும் கிரகங்கள் நிற்கும் நிலைகளையும் சோதிடத்தின் ஐந்து அங்கங்களையும் (பஞ்சாங்கம்) நன்கறிந்த பெருங்கணி (பெரிய சோதிடன்) எழுந்து மன்னர்கள் எல்லாம் உன் திருவடியைப் பணியும் முகூர்த்தம் வருகிறது ; அதில் நீ போருக்கு எழுவாயாக என்று கூறுகிறான் . அவ்வாறே போருக்குப் புறப்பட்ட செங்குட்டுவன் யானை மேல் ஏறிச் சென்றதை இளங்கோவடிகள் இவ்வாறு வர்ணித்துள்ளார்:

“**நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி**
**உலகுபொதி உருவத் துயர்ந்தோன் சேவடி**
**மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து**
**இறைஞ்சாக் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு**
**மறையோ ரேந்திய ஆவுதி நறும்புகை**
**நறைகெழு மாலையின் நல்லகம் வருத்தக்**
**கடக்களி யானைப் பிடர்த்தலை யேரினன்**
**குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென**
**ஆடக மாடத் தறிதுயல் அமர்ந்தோன்**
**சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்**
**தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்**
**வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்**
**ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்**
**தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி**” (சிலப். 26:54-67)

நிலவைச் சடைமுடியில் அணிந்த , உலகைப் பொதிந்த உருவமுடை ய, உயர்ந்தோனாகிய சிவனின் சிவந்த அடிகளை வஞ்சி மாலையோடு சேர்த்துத் தலையில் புனைந்து, வணங்காத தலையால் சிவனை வணங்கி (கோயிலை) வலம் வந்து அந்தணர் எடுத்த ஓமத்தின் புகை அவன் மார்பில் அணிந்த மலர்மாலையை வாடச் செய்ய யானை மேல் செங்குட்டுவன் ஏறினான் . உலகு பொதிந்த என் றால் சூரியன், சந்திரன், பஞ்ச பூதங்கள்,


http://Creativecommons.org//license/by/4.0/.

ஆன்மா என்னும் அட்டமூர்த்தியாய் ஆனவன் சிவன் என்பது வேங்கடசாமி நாட்டார் விளக்கம் . ஆடகமாடத்தில் அறிதுயில் அமர்ந்த திருமாலின் (திருவனந்தபுரத் திருமாலின்) பிரசாதம் கொண்டு சிலர் நின்று வாழ்த்த சிவனின் திருவடிகளை மணிமுடியில் கொண்டதால் திருமாலின் பிரசாதத்தை வாங்கித் தோளில் வைத்துக்கொண்டான் . சேவடியைத் தலையில் தரித்தான் என்பது சேவடியைச் சிந்தனையால் தலையில் தரித்தல் அல்லது சேவடிப் பிரசாதம் என்பதும் தோளில் தரித்த திருமால் பிரசாதம் என்பது மாலை என்பதும் வேங்கடசாமி நாட்டார் விளக்கம்.

வஞ்சியில் இருந்து புறப்பட்ட செங்குட்டுவன் நீலகிரியில் தங்கினான் . அப்போது வானில் சென்ற முனிவர்கள் செங்குட்டுவனைக் காண கீழே இறங்கி அவன் முன் பேரொளியுடன் தோன்றினர் . செங்குட்டுவன் அவர்களை வணங்க, 'சிவனது அருளினாலே வஞ்சி நகரம் விளங்குமாறு தோன்றிய சேர மன்னனே ! நாங்கள் பொதியமலைக்குச் செல்கிறோம். இமயத்துக்குச் செல்வது உன் கருத்து என்றால் அங்கு அரிய மறைகளில் சிறந்த அந்தணர் உள்ளனர். அவர்களை நீ நலியாது காக்க வேண்டும்' என்று கூறி அவனை வாழ்த்திச் சென்றனர்.

நீலகிரியில் இருந்து கங்கைக் கரைக்குச் சென்ற செங்குட்டுவனது படை அங்கு நூற்றுவர்கன்னர் தந்த படகுகளால் கங்கையைக் கடந்து உத்தர நாட்டை அடைந்தது . அப்போது கனக, விசயர் என்ற மன்னர்கள் பல மன்னர்களின் துணையுடன் போருக்கு வந்தனர் . கடும்போர் நடைபெற்றது . போரில் சேரர் படை வென்றது . படைவீரர்கள் இந்தப் போரை, கண்ணன் கடல் கலக்கிய போருடனும், இராமன் இலங்கையில் செய்த போருடனும், மகாபாரதப்போருடனும் ஒப்பிட்டு முன்தேர் குரவை ஆடினர். 'இமய மலையில் உள்ள வேதம் காக்கும் அந்தணர் ஓம குண்டத்தில் முத்தீ ஓம்பும் அருள் வாழ்க்கையைக் காப்பீராக ' எனக் கூறி செங்குட்டுவன் தூதுவர்களை அனுப்பினான். பின் இமயத்தில் கல் எடுத்து சிலை செய்யத் தொடங்கினர் (சிலப். 26:1-254). அதன்பின் செங்குட்டுவன் கண்ணகி படிமத்தைக் கனக விசயர் தலைமேலேற்றிக் கங்கைக்குக் கொணர்ந்தான் . கனக விசயரை செங்குட்டுவன் வென்ற திறத்தைக் கூறும் இளங்கோவடிகள் தேவ அசுர யுத்தம் 18 ஆண்டிலும், இராம இராவண யுத்தம் 18 மாதத்திலும், மகாபாரதப் போர் 18 நாளிலும் செங்குட்டுவன் போர் 18 நாழிகையிலும் முடிந்ததாகக் கூறுகிறார். கங்கையில் நூல் வல்லோர் கொண்டு முறைப்படி செங்குட்டுவன் நீராட்டினான் . பின் பாடிவீட்டில் அரச இருக்கையில் மன்னன் வீற்றிருந்தபோது மாடல மறையோன் அங்கு வந்தான் . அவன் மன்னனை வாழ்த்தி, 'மாதவி பாடிய கானல்வரிப் பாட்டு கனக விசயரின் முடித் தலையை நெரித்தது ' என்றான். பகைப்புலத்தார் பலரும் அறியும்படி அதை விளக்குமாறு மன்னன் அவனிடம் உரைத்தான் . மாடலன் நிகழ்ந்து அனைத்தையும் கூறினான். அகத்தியரது பொதிய மலையை வலம்வந்து குமரி த்துறையில் புனித நீராடித் திரும்பிய மாடலன் மதுரைக்குச் சென்ற போது நடந்தவற்றையும் , மாதரி அடைக்கலப் பொருளை இழந்ததால் வருந்தி தீக்குளித்து இறந்ததையும் , கவுந்தியடிகள் மிக வருந்தி உண்ணாநோன்பிருந்து உயிர்விட்டதையும் தெரிவித்தான். பின் புகாருக்குச் சென்ற மாடலன் எல்லாவற்றையும் அங்கிருந்தோருக்கு அறிவித்ததையும் கோவலன் தந்தை வருந்தி பௌத்தத் துறவி ஆனதையும், கண்ணகி தந்தை ஆசீவகத் துறவி ஆனதையும், மாதவி தன் மகள் மணிமேகலையை பௌத்த சங்கத்தில் சேர்த்து தானும் துறவு கொண்டதையும் , கோவலன், கண்ணகி இருவரின் தாயாரும் மிக வருந்தி ஏங்கி உயிர்விட்டதையும் அவன் கூறினான். தன் வாயால் கேட்ட செய்திகளால் பலர் துன்பம் எய்தி இறந்ததால் தனக்கு ஏற்பட்ட பாவம் போக்க , அவன் கங்கையில் நீராட வந்ததாகத் தெரிவித்தான். பாண்டிய நாட்டில் அதன்பின் நடந்தவைகளையும் தெரிவித்தான் . அத்துடன் இரவாகிவிட்டது . மறுநாள் அரசன் இருக்கையில் ஏறிய பிறகு மாடலனை மீண்டும் அழைத்து சோழ நாட்டில் நடந்தவைகளை மன்னன் கேட்க மாடலன் விரித்துரைத்தான். மாடல மறையோனின் அறிவை வியந்த செங்குட்டுவன் அவனுக்கு ஐம்பது துலாம் பொன்னைத் தானமாக வழங்கிச் சிறப்பித்தான் . பின் செங்குட்டுவன் வஞ்சி நகரம் திரும்பி னான் (சிலப். 27.1-256). அரசி வேண்மாளுடன் மகிழ்ந்து இருந்த அவன் வேண்மாளுடன் நாடக அரங்கில் பறையூர் என்ற அந்தணர் ஊரைச் சேர்ந்த சாக்கையனின் கூத்தைக் கண்டு மகிழ்கிறான். சிவன் ஆடிய நடனமான கொட்டிச் சேதம் (கொடுகொட்டி) என்ற நடனத்தை சாக்கையன் ஆடுகிறான் . உமை ஒருபுறமாக, அணிகலன்கள் கூட ஆடாமல் சிவன் ஆடிய இந்த ஆட்டத்தை இளங்கோவடிகள் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

**"திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்**
**பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்**
**செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்**
**பாடகம் பதையாது சூடகந் துளங்காது**
**மேகலை ஒலியாது மென்முலை அசையாது**
**வார்குழை ஆடாது மணிக்குழல் அவிழாது**
**உமையவள் ஒருதிற னாக ஓங்கிய**
**இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்**
**பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்**
**கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்தவன்"** (சிலப். 28: 67-77)

அதன்பின் செங்குட்டுவன் அரசவையில் இருக்கும்போது, போரில் தோற்று சிறை பிடிக்கப்பட்ட வட நாட்டு அரசர்களை ஏற்கனவே அவன் கட்டளைப்படி சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டச் சென்ற நீலன் என்பவன் திரும்பி வந்து , 'புறமுதுகிட்டு துறவிக் கோலம் கொண்டு ஓடியவர்களை இவ்வாறு கொண்டுவருதல் முறையன்று' என சோழன் கூறியதையும் 'போர்க்களத்தில் தன் வெண்கொற்றக் குடையின் கம்பு நடனத் தலைக்கோல் ஆகுமாறு அதைப் பறிகொடுத்து, உமையை ஒரு பாகமாகக் கொண்டு குயிலாலுவம் என்ற இமயச் சிகர உச்சியில் உள்ள சிவனை வணங்கும் துறவி வேடம் பூண்டு தப்பியவர்களை இவ்வாறு கொண்டுவருதல் புதுமையானது' என்று பாண்டியன் கூறியதையும் தெரிவிக்கிறான் . அதை கேட்டு கடுஞ்சினம் கொண்ட செங்குட்டுவனின் கண்கள் சிவக்கின்றன . உடனே மாடலன் எழுந்து மன்னனை வாழ்த்தி அவன் வீரத்தின் பெருமையைப் போற்றி அவன் வென்ற போர்களைக் குறிப்பிட்டு , அவனைப் பல்லாண்டு வாழ்கவெ ன வாழ்த்தி, தான் சொல்வதை இகழாமல் கேட்க வேண்டும் என வேண்டிக்கொண்டு மேலும் கூறுகிறான் . 'உன் அகவை ஐம்பதாகிவிட்டது. இதுவரை அறக்களவேள்வி செய்யாது மறக்கள வேள்வியான போர்களையே புரிந்தாய் ' என்று கூறிய மாடலன் அருஞ்செயல்கள் செய்து மறைந்த பல அரசர்களைக் குறிப்பிட்டு யாக்கை நிலையாமையை உணர்த்தினான்; செல்வம் நிலையாமையையும் இளமை நிலையாமையையும் உணர்த்தினான் . உயிர்கள் தேவராய். மனிதராய், விலங்காய், நரகராய் தான் செய்யும் வினைக்கேற்ப மீண்டும் மீண்டும் மாறி மாறிப் பிறப்பதை விளக்கினான் . 'உன் ஆருயிர் ஏனையோர் செல்லும் எளிய வழியில் செல்லக்கூடாது ; தேவர்கள் போற்றும் சிறந்த வழியில் செல்ல வேண்டும் . அதற்கு பெருமன்னருக்குரியதாக வேதங்கள் விதித்திரு க்கும் வேள்விகளை முறைப்படி செய்வாயாக ' என்று கூறுகிறான் . இந்த இடத்தில் இளங்கோவடிகள் கூறுவது நோக்கத்தக்கது. 'மாடல மறையோன் தன் மறையோதும் நாவாகிய ஏராலே மன்னனின் காது என்ற வயலிலே விதைத்த விதையாகிய உயர்ந்த கருத்து பெரிதாக விளைந்து அதன் பயனைக் கொள்ளும் வேட்கையை மன்னவனிடம் ஏற்படுத்த, நான்மறை மரபில் தேர்ந்த சிறந்த அந்தணர்களைக் கொண்டு அவன் மாடலன் கூறிய முறைப்படி வேள்விகளைச் செய்வித்தான் ' என்று இளங்கோ தன் கூற்றாகக் குறிப்பிடுகிறார் . அதன்பின் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டத்தில் கண்ணகி படிமத்தை முறைப்படி நிறுவி அதற்கு நாள்தோறும் ஓமமும் பூசையும் நடத்த ஏற்பாடு செய்தான் (சிலப். 28:78-234). அதன்பின் ஒரு நாள் அவன் கண்ணகி கோயிலில் அமர்ந்திருக்கும்போது கண்ணகியின் செவிலித்தாயும், அடித்தோழியும், தேவந்தியும் அங்கு வந்து புலம்புகின்றனர். அப்போது கண்ணகி தேவ வடிவில் தோன்றி, 'தென்னவன் தீது இலன். நான் அவன்தன் மகள்' என்று கூறி 'இந்தக் குன்றில் நான் அகலாது இருப்பேன் ' என்று கூறுகிறாள். வஞ்சி மகளிர் கண்ணகியைப் போற்றிப் பாடுகின்றனர் . அத்துடன் மூவேந்தர்களையும் போற்றிப் பாடுகின்றனர் (சிலப். 29: வாழ்த்துக்காதை). பாசண்ட சாத்தன் ஒரு அந்தணன் வடிவு கொண்டு அங்கு வந்து முற்பிறவி நினைவு தரும் தன் கமண்டல நீரை மாடலனிடம் கொடுத்து அங்கு நிற்கும் மூன்று சிறுமிகள் மேல் தெளிக்குமாறு கூறுகிறான் . கோவலன் தாய் , கண்ணகி தாய் , மாதரி மூவரே மறுபிறப்பெடுத்து அங்கு நின்ற அச்சிறுமிகள். நீரைத் தெளித்தவுடன் அவர்கள் பழை ய நினைவைப் பெற்று பெரியவர்கள் போல் அரற்றுகின்றனர் . மன்னன் மாடலனை நோக்க அவன் அவர்களைப் பற்றிய வரலாற்றைக் கூறி விளக்குகிறான் . அப்போது அவன் செங்குட்டுவன் சிவனது அருளால் தோன்றி உலகை விளங்கவைப்பதாகக் குறிப்பிடுகிறான் . இலங்கை வேந்தன் கயவாகு உள்பட பல நாடுகளில் இரு ந்து வந்த மன்னர்களும் கண்ணகியைத் துதித்து வரம் வேண்டுகின்றனர் . அப்போது வானில் இருந்து 'தந்தேன் வரம்' என்று


http://Creativecommons.org//license/by/4.0/.

கண்ணகியின் குரல் ஒலிக்கிறது . செங்குட்டுவனும் அனைவரும் கண்ணகியை வணங்குகின்றனர் . பின் செங்குட்டுவன் மாடலனோடு வேள்விச் சாலைக்குச் செல்கிறான் . இங்கு இளங்கோ மாடலனை , 'மெய்ந்நெறி விரும்பிய மாடலன்' என்று கூறுகிறார். இளங்கோவடிகளும் அச்சமயத்தில் அங்குச் சென்றார் . தெய்வம் ஏறிய தேவந்தி அவரது வரலாற்றையும் கூறினாள் . இளங்கோவடிகள் இவற்றை எல்லாம் கூறி தன் கருத்தாகச் சில அறிவுரைகளையும் கூறி காப்பியத்தை முடிக்கிறார் . 'தெய்வம் தெளிமின்', 'தெளிந்தோர் ஓம்புமின்', 'ஊன் ஊண் துறமின்', 'உயிர்க்கொலை நீங்குமின்', '(இறந்த பிறகு ) செல்லும் தேயத்துக்கு (மறுமை) உறுதுணை (அறம்) தேடுமின்' என்பவை அவற்றில் சில (சிலப். 30: 45-202).

**சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரமும்:**

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துகள் மிக மிகக் குறைவு என்றும் சிலப்பதிகாரம் , மணிமேகலையில் அவை மிகுதியாக இருப்பதால் அவை சங்க இலக்கியங்களுக்கு மிக நீண்ட காலம் கழித்துத் தோன்றியவை என்றும் சில அறிஞர்கள் கூறுவர் . அறிஞர் கே . கே. பிள்ளை தனது , 'சங்கத் தமிழர் வரலாறு - மக்களும் பண்பாடும்' என்ற நூலில் "இக்கடவுள்களைப் பற்றிய எண்ணற்ற புராணக் கதைகள் சிலப்பதிகாரக் காலத்துக்குள் தமிழகத்தில் நுழைந்துவிட்டன . தமிழகத்தில் குடியேறிய ஆரியர்கள் சமயக்கதைகள் பலவற்றைப் புனைந்து பரப்பிவிட்டனர். அவர்கள் வேள்விகள் வளர்க்கத் தொடங்கினர் " என்று கூறுகிறார் [13]. அதாவது சிலப்பதிகாரக் காலத்திற்கு சற்று முன்பாகத்தான் இவை தமிழகம் வந்தன என்பது போன்ற ஒரு தொனி அவர் கூற்றில் உள்ளது. இத்தகைய கருத்துடைய அறிஞர் வையாபுரிப் பிள்ளை பல காரணங்களைக் காட்டி சிலப்பதிகாரத்தின் காலத்தை கி. பி. 9 ஆம் நூற்றாண்டு என்று கூறினார் [14]. சிலப்பதிகாரத்தில் உள்ள வானியல் குறிப்புகளுக்கு அடியார்க்கு நல்லார் தந்த விளக்கத்தைக் கொண்டு வானியல் அறிஞர் சுவாமிக்கண்ணு பிள்ளை மதுரை எரிந்த ஆண்டு கி.பி 756 என்று வானியல் அடிப்படையில் முடிவு செய்தார் [15]. ஆனால் இக்கணக்கீடு தவறானது என்பதை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கை வேந்தன் கயவாகுவைப் பற்றி சிலப்பதிகாரத்தில் வரும் குறிப்பைக் கொண்டு சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு என்ற முடிவையே பெரும்பாலான அறிஞர்கள் ஏற்கிறார்கள்.

சங்க இலக்கியம் காட்டும் தமிழகச் சமயநிலைக்கும் சிலப்பதிகாரம் காட்டும் தமிழகச் சமயநிலைக்கும் பெரும் வேறுபாடு உள்ளதாகச் சில அறிஞர்கள் கூறுவது ஆராயத்தக்கது . இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய , 'சங்ககாலத் தமிழரின் சமயம் - ஒரு மீளாய்வு' என்ற கட்டுரையில் சங்க இலக்கிய அகச்சான்றுகளை ஆராய்ந்து அக்காலச் சமயநிலை பற்றி பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது[16].

சங்ககாலத் தமிழர் வேதத்தை நன்கு அறிந்திருந்தனர் . வேதத்தை மிகவும் உயர்வாகப் போற்றினர் . வேதியர் எனப்படும் பிராமணர் தமிழ்நாட்டில் நிறைய வாழ்ந்தனர். அவர்கள் மிகவும் உயர்வாகப் போற்றப்பட்டனர். அவர்கள் வேதம் ஓதுதலும் வேள்வி செய்தலும் நாட்டுக்குப் பெரிதும் நன்மை பயப்பதாகக் கருதப்பட்டது . அவர்கள் 'அறம்புரிபவர்கள்; தூய்மையான வாய்மை உடையவர்கள் ' என்று புகழப்பட்டனர் . மூவேந்தர்களும் சிற்றரசர்களும் பல செல்வர்களும் வேள்விகள் செய்தனர். வேத, புராண வழியில் வந்த தெய்வங்களான, தற்கால இந்து மதத் தெய்வங்கள் பெரும்பாலும் அனைத்தும் வழிபடப்பட்டன. சிவன், கொற்றவை, முருகன், திருமால் முதலிய தெய்வங்கள் சங்க இலக்கியங்களில் வைதிக அடிப்படையிலேயே கூறப்பட்டுள்ளன ; வைதிகத்துக்கு மாறுபட்ட தமிழர் கடவுளாக அல்ல . புராணச் செய்திகள் மிகப்பலவாக சங்க நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன . கோயில்கள் நிறைய இருந்தன . கோயில்களில் நாள்வழிபாடுகள் நடந்தன . திருவிழாக்களும் நிறைய நடத்தப்பட்டன.

சங்க காலத்திற்கு முன்பாகவே வேள்விகள் நடைபெற்றுவந்தன . தொல்காப்பியர் காலத்திற்கு நெடுங்காலம் முன்பே வைதிகம் இங்கு வந்து நன்கு நிலைபெற்றிருந்தது . மகாபாரதக் காலம் எனப்படும் கி .மு ஆயிரத்துக்கு முன்பே தமிழ்நாட்டில் வைதிகம் பரவிவிட்டது . தமிழர்கள் வைதிகத்தை மிகவும் விரும்பி ஏற்றிருந்தனர். அதை மிகவும் மதித்துப் போற்றினர் . தொல்காப்பியர் வைதிகர். பிராமணர் தமிழ்ச் சமுதாயத்தில் ஒன்றி வாழ்ந்தனர் . அவர்கள் தமிழ்ப் பொருளிலக்கணத்தில் நீக்க முடியாத வகையில் இடம் பெற்றிருந்தனர் .. அவர்கள் அயலாராகவோ பகைவராகவோ , வந்தேறிகளாகவோ கருதப்படவில்லை . நால்வருண முறை தமிழ்ச் சமுதாயத்தில் நிலைபெற்றிருந்தது . ஆனால் அதனால் எந்தக் கெடுதலும் இல்லை . தொழில்முறை வேறுபாடு மட்டுமே இருந்தது . சூத்திரர் எனப்படும் வேளாளர் எந்த இழிவும் இன்றி மதிப்புடன் வாழ்ந்தனர் . குயவன்,


http://Creativecommons.org//license/by/4.0/.

புலையன் முதலிய தொழில் அடிப்படையிலான சாதிப் பிரிவுகளும் அப்போது இருந்தன . இவ்வாறு அக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

இந்நிலையுடன் சிலப்பதிகாரத்தில் காணப்படுபவற்றை ஒப்பிடும் போது அவை சங்க இலக்கியத்தில் காணப்படுபவற்றின் தொடர்ச்சியாக உள்ளதையே காண்கிறோம் ; பெரும் வேறுபாட்டைக் காணமுடியவில்லை . இவற்றின் சுருக்கமான ஒப்பீட்டைக் கீழே காண்போம்.

வேதங்களும் வேதியர்களான பார்ப்பனர்களும் சங்க இலக்கியங்களில் மிகவும் போற்றப்பட்டதைப் போலவே சிலப்பதிகாரத்திலும் போற்றப்படுவதைக் காண்கி றோம். சிவனைத் தலைவனாகக் கொண்டு பற்பல தெய்வங்களுக்கும் கோயில்கள் மதுரையில் இருந்ததை மதுரைக்காஞ்சி கூறுகிறது . இவ்வாறே புகாரிலும் பல கோயில்கள் இருந்ததைப் பற்றிய குறிப்பு பட்டினப்பாலையில் உள்ளது . மதுரையிலும் புகாரிலும் இவ்வாறு கோயில்கள் இருந்ததை சிலப்பதிகாரம் தெளிவாகக் கூறுகிறது . மதுரையில் தலைமையாக இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடும் சிவன் கோவிலை 'அருந்தெறற் கடவுள் அகன் பெருங்கோயில்' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கோவலனும் கண்ணகியும் மதுரையை நெருங்கும்போது இந்த சிவன் கோவில், மன்னன் அரண்மனை இரண்டு இடங்களில் இருந்தும் பல வித முரசங்களின் ஒலிகள் கேட்டதாக இளங்கோ குறிப்பிடுகிறார் . திருவிளையாடற் புராணம் மூலம் இது சொக்கநாதர் கோயில் என்று அழைக்கப்பட்டதை அறியலாம் . தற்காலத்தில் இது மீனாட்சியம்மன் கோயில் என்று கூறப்படுகிறது . சங்க காலத்தில் நாற்பெரும் தெய்வங்களாக சிவன், திருமால், பலராமன், முருகன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர் . புறஞ்சேரியில் கோவலன், கண்ணகி தங்கியிருந்தபோது விடிகாலையில் சிவன் கோயில் , திருமால் கோயில், பலராமன் கோயில், முருகன் கோயில் என்ற நான்கு கோயில்களில் இருந்து முரசுகள் முழங்கும் ஒலி கேட்டதாக இளங்கோ குறி ப்பிடுகிறார். சங்க காலத்தில் சிறந்திருந்த பலராமன் வழிபாடு பிற்காலத்தில் மறைந்துவிட்டது . ஆனால் சிலப்பதிகார காலத்திலும் பலராம வழிபாடு சிறந்திருந்ததையும் இந்த நான்கு தெய்வங்கள் பெருந்தெய்வங்களாக இருந்ததையும் சிலப்பதிகாரம் காட்டுகிறது . சிலப்பதிகாரத்தில் கூறப் படும் புராணச் செய்திகளில் பல சங்க இலக்கியத்தில் கூறப்பட்டவை. தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நடத்தப்பட்டதை சங்க இலக்கியம் காட்டுகிறது . உறையூரில் பங்குனி முயக்கம் என்ற காமன் விழா கொண்டாடப்பட்டதையும் இந்திரவிழா நடத்தப்பட்டதையும் திருப்பரங்குன்றம், திருவேங்கடம் ஆகிய இடங்களில் திருவிழாக்கள் நடந்தது பற்றியும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பங்குனி முயக்க விழாவைப் பற்றி சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றது. இந்திர விழாவைப் பற்றி அது விரிவாகக் கூறுகிறது . திருவரங்கம், திருவேங்கடம், அழகர்மலை ஆகிய இடங்களில் திருமால் கோயில் இருந்தது பற்றி அது கூறுகிறது . கொடுகொட்டி, பாண்டரங்கம் என்ற சிவனின் நடனங்களை சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இவற்றைக் கலித்தொகையும் குறிப்பிடுகிறது . பாவை (இலக்குமி) நடனம் பற்றி சிலப்பதிகாரம் கூறுகிறது. வியக்கத்தகும் இந்தப் பாவைப் படிவம் கொல்லி மலையி ல் இருந்ததைப் பற்றி பல சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. மகாபாரதப் போரில் சேரன் இருதிறத்துக்கும் பெருஞ்சோறு கொடுத்ததைப் பற்றி புறநானூறு (புற. 2:13-16) குறிப்பிடுகிறது. அதை சிலப்பதிகாரமும் குறிப்பிடுகிறது (சிலப். 29:பாடல் 24). மூன்றாம் பதிற்றுப்பத்தைப் பாடி ய பாலைக் கௌதமனாரைச் சேரன் பத்து பெருவேள்வி செய்து சுவர்க்கம் புகுவித்தான் என்பது பதிற்றுப்பத்தில் காணப்படும் செய்தி . சிலப்பதிகாரத்தில் அந்த சேரனை நாடி மறையோன் பராசரன் செல்கிறான். சேரன் செங்குட்டுவன் செய்த போர்கள் பற்றி சிலப்பதிகாரத்தில் மாடலன் கூறுபவை ஐந்தா ம் பதிற்றுப்பத்தின் பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன . மேலும் அப்பதிகம் பத்தினித் தெய்வத்துக்குச் சிலைவடிக்க அவன் கங்கைக்குச் சென்றதையும் ஆரியரை வென்றதையும் குறிப்பிடுகிறது . சிலப்பதிகாரத்தின் இசைப்பாடல்கள் சங்க காலத்தில் பின்பற்றப்பட்ட பொருளிலக்கண அடிப்படையி லேயே அமைந்துள்ளன. அகத்திணைப் பாடல்கள் சங்க கால மரபைப் பின்பற்றியே அமைந்துள்ளன . சங்க கால புறத்திணைத் துறைகள் பல செங்குட்டுவன் சூளுரையில் கூறப்படுகின்றன . கண்ணகி கோயிலை அமைக்கும் முறை தொல்காப்பியம் குறிப்பிடும் காட்சி , கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்ற முறையிலேயே அமைந்துள்ளது (தொல். பொருள். 63:19-21). நால்வருண முறை நிலைபெற்றிருந்ததை தொல்காப்பியத்திலும் , சங்க இலக்கியத்திலும் (புற. 183) சிலப்பதிகாரத்திலும் காண்கிறோம் . இவ்வாறாக, சங்க கால நிலையின் தொடர்ச்சியையே சிலப்பதிகாரத்தில்


http://Creativecommons.org//license/by/4.0/.

காண்கிறோம். இளங்கோவடிகள் மிகப்பிற்காலத்தவர் என்றும் அவர் தமக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்ட சங்க கால சூழ்நிலைகளை அமைத்துப் காப்பியத்தில் பாடினார் என்றும் கொள்வது பொருத்தமானது அன்று.

**இளங்கோவடிகளின் சமயம்:**

கவுந்தியடிகள் பாத்திரத்தையும் அவரும் சாரணரும் அருகனைப் போற்றும் பாடல் பகுதியையும் கொண்டு சிலர் இளங்கோவடிகள் சமணர் என்று கூறுவர் . ஆனால் சிவன், திருமால், கொற்றவை, முருகன் ஆகியோரைப் போற்றும் விதத்தில் இளங்கோ கூறுபவை மிகப்பலவாக சிலப்பதிகாரத்தில் உள்ளன . சிலப்பதிகாரம் முழுவதும் உள்ள இத்தகைய பகுதிகளின் அளவுடன் ஒப்பிடும்போ து சமணத்தைப் பற்றிய பகுதிகளின் அளவு மிகவும் குறைவு. வேதம், பிராமணர், மற்றும் வைதிக இந்து மதத்தின் தெய்வங்கள் பற்றிய குறிப்புகளே சிலப்பதிகாரத்தில் பெரிதும் நிறைந்துள்ளன. எனவே சமணக் குறிப்புகளைக் கொண்டு இளங்கோவடிகளைச் சமணர் என்று கூறுதல் யானையின் வாலை மட்டும் காட்டி யானை என்பது கயிறு போன்றது எனக் கூறுவதை ஒக்கும்.

காப்பிய இறுதியில் இளங்கோவடிகள் ஊன் உணவு துறமின் எனக் கூறுவதைச் சமணச் சார்புடையதாகச் சிலர் கருதக்கூடும் . மகாவீரருக்கு முன்பாகவே வைதிக இந்துமதத்தில் இருந்த கொள்கையே இது . வேத காலத்தை அடுத்து , இராமாயண காலத்துக்கு முன்பாக தோன்றிய மனு தர்ம நூல் புலால் உண்ணக்கூடாதது என்று கூறி புலால் உண்ணாமையைப் போற்றுகிறது . எனினும் பண்டைக் கால ரிஷிகள் பின்பற்றியபடி வேள்விகளில் தெய்வங்களுக்கும் , சிரார்த்தங்களில் பிதுர்களுக்கும் படைக்கப்படும் புலால் உணவை மட்டும் உண்ணலாம் என்றும் அது கூறுகிறது [17]. இதுபற்றிய விளக்கத்தை இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய , 'திருக்குறளும் வேள்வியும்' என்ற கட்டுரையில் காணலாம் [18]. எனவே இங்கு இளங்கோவடிகள் புலால் உண்ணக் கூடாது என்று கூறுவதைக் கொண்டு அவரைச் சமணர் என்று கூற முடியாது . வைதிகக் கொள்கையான இதை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பிராமணர் பின்பற்றி வருகின்றனர் . வேள்வியை மிக உயர்வாகக் கூறி புலால் உண்ணாதீர்கள் என்றும் இளங்கோ கூறுவது கருதத்தக்கது.

பௌத்த, சமணர்கள் வேதங்களைத் தங்களுடைய நூல்களாக ஏற்பதில்லை . பௌத்தர்கள் புத்தரின் போதனைகளையே தங்கள் மூலநூலாகக் கொள்ளுவர். சமணர் அருகன் அருளிய பரமாகங்களே தங்களது பூர்வ ஆகமங்கள் என்றும் அவை மறைந்து போனதால் அவற்றின் சாரமான மகாவீரரின் போதனைகளைக் கொண்ட ஆகமங்களே தங்கள் நூல்கள் என்றும் கொள்வர் . இந்த இரு சமயத்தினரும் வேதங்களை ஏற்காததுடன் வேதக் கருத்துகளுக்கு மாறான சில கொள் கைகளும் கொண்டவர்கள். எனவே வேதத்தையே தங்கள் நூலாகக் கொண்ட பிராமணர்களை அவர்கள் போற்ற விரும்பமாட்டார்கள் . வேள்விகளை அவர்கள் விரும்பமாட்டார்கள் . விலங்குகளைப் பலி கொடுக்காத வேள்விகளைக் கூட அவர்கள் பயனற்றதாகவே கருதுவார்கள் . இவ்விரு சமயங்களும் இந்து மத அடிப்படைக ளின் மேலேயே தோன்றி இந்து மதக் கருத்துகள் பலவற்றைத் தாங்களும் கொண்டிருப்பவை. இந்து மதத்தில் செல்வாக்கு குன்றிப் போன இந்திரனையும் பிரம்மாவையும் பற்றிய மிகப்பல குறிப்புகளை அவர்கள் நூல்களில் காணலாம் . ஆனால் சிவன் , திருமால் போன்ற முதன்மையான இந்துக் கடவுள்களை போற்றுவதற்கு அவர்கள் விரும்ப மாட்டார்கள் . அவர்களைப் பற்றிய குறிப்புகளைக் கூட அவர்கள் நூல்களில் காண்பது அரிது. புத்தரையும், அருகரையும் மட்டுமே அவர்கள் போற்றுவார்கள். மகாயான பௌத்தர்கள் சிவனுக்கு உரியவற்றை , சிவனுக்கு இணையாக அவர்கள் கருதும் அவலோகிதர் மேல் ஏற்றிக் கூறுவார்கள். எடுத்துக்காட்டாக, அகத்தியருக்கு அவலோகிதர் தமிழைத் தந்ததாக புத்தமித்திரனாரின் 'வீரசோழியம்' கூறும்[19]. சமணர்கள் சிவனுக்கு உரியவற்றைத் தங்கள் அருகன் மேல் ஏற்றிக் கூறுவார்கள் . எடுத்துக்காட்டாக, அருகனைக் கவுந்தியடிகள், 'சிவகதிநாயகன், பரமன், பெரியவன், சங்கரன், ஈசன், எண்குணன், பாத்தில் பழம்பொருள் , வேத முதல்வன்' என்றெல்லாம் கூறுகிறார் (இளங்கோவடிகள் சமணரின் மனப்போக்கின்படியே கவுந்தியடிகளை அமைத்துள்ளார்). சிவன். திருமால் போன்ற முதன்மையான இந்துத் தெய்வங்களை உயர்த்திக் கூற விரும்பாத சமணர்களுக்கு மாறாக இளங்கோவடிகள் வாய்ப்புக் கிடைக்கும் இடங்களில் எல்லாம் சிவன், திருமாலை பெரிதும் போற்றும் விதமாகப் பாடியுள்ளார் . வேதத்தின் உயர்வையும் பிராமணரின் உயர்வையும் மிகப்பல இடங்களில் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்துப் புராணங்களில் உள்ள பல செய்திகளை இளங்கோவடிகள் பல இடங்களி ல் கூறியுள்ளார். சாரணர் உரையாற்றும்போது தோன்றிய தேவனின் கதையாக கவுந்தியடிகள் கூறியதைத் தவிர சமணநூல்களில் காணப்படும் எண்ணற்ற கதைகளில் எதுவும் சிலப்பதிகாரத்தில் கூறப்படவில்லை . இவை



http://Creativecommons.org//license/by/4.0/.

எல்லாம் சமணரின் இயல்புக்கு மாறானவை . அவர் சமணராக இருந்திருந்தால் இவ்வாறு எல்லாம் தன் காப்பியத்தை இயற்றியிருக்க மாட்டார். எனவே அவர் சமணர் அல்லர் என்பது தெளிவாகும்.

இளங்கோவடிகளின் உள்ளக் கிடக்கையை அவர் சிலப்பதிகாரத்தில் மிகுதியாக வெளிப்படுத்தும் கருத்துகளில் இருந்து அறியலாம் . வைதிக இந்து மதத்துக்கு வேதமே அடிப்படை . வேதத்தை அனைத்திலும் உயர்ந்ததாகக் கருதிப் போற்றுவது வைதிக இந்துமதத்தின் கொள்கை . எனவே வேதியரைப் போற்றுவதும் இந்து மதத்தின் இயல்பு. அக்காலத்தில் இந்து மதத்தில் வேள்வியின் செல்வாக்கு இக்காலம் போல் அல்லாமல் மிக உயர்ந்திருந்ததை சங்க இலக்கியத்தால் அறியலாம் . பிற்காலத்தில் வேள்வி குறைந்து பூசை மிகுந்தது . இளங்கோவடிகள் வேதத்தையும், வேள்வியையும், பிராமணர்களையும் மிகவும் உயர்வாகத் தனது கூற்றாகவே மிகப்பல இடங்களில் கூறியுள்ளார் . மாங்காட்டு மறையோன், மாடல மறையோன், பராசரன் ஆகிய பார்ப்பனப் பாத்திரங்களை அவர் மிகவும் உயர்வாகச் சித்திரித்துள்ளார் . பிற பார்ப்பனப் பாத்திரங்களான கௌசிகன் , வார்த்திகன், தேவந்தி ஆகியோரையும் உயர்வாகவே காட்டியுள்ளார் . சிவன், கொற்றவை, திருமால், முருகன் ஆகிய இந்து தெய்வங்களை மிகவும் உயர்வாக , மிகுந்த பக்தி உணர்வு தோன்ற பாடியுள்ளார் . எனவே அவர் வைதிக இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தெளிவாக அறியலாம். சிவனையே அவர் பெருந்தெய்வமாகப் பல இடங்களில் தன் கூற்றாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே அவர் சிவனையே பரம்பொருளாகக் கொள்ளும் கொள்கை உடையவர் என அறியலாம் . அக்காலத்தில் சைவம், வைணவம் என்ற பிரிவுகள் தோன்றியிருந்தாலும் அவை பிற்காலத்தைப் போல் பெரிதாக வளர்ந்திருக்கவில்லை. சிவனை முதன்மையாக ஏற்றாலும் திருமால் முதலிய பிற தெய்வங்களையும் வணங்குதல் இந்துக்களின் இயல்பு . இதன்படியே இளங்கோ திருமாலையும் போற்றும் விதத்தில் பாடியுள்ளார்.

இந்துமதம் எல்லாத் தெய்வங்களும் ஒரே பரம்பொருளின் வடிவங்களே என்ற கொள்கை உடையது. இந்து மதத் தெய்வங்களை மட்டுமின்றி பிற மதக் கடவுள்களையும் அவ்வாறே கருதுவதால் எல்லாக் கடவுளரையும் போற்ற இந்துக்கள் தயங்குவதே இல்லை. அதேநேரத்தில் பிற மதத்தினர் தங்கள் கடவுளைத் தங்களுக்கு மட்டுமே உரியதாகக் கொள்வதால் பிற சமயத் தெய்வங்களை அவர்கள் ஏற்பதில் லை. கோவலனும் கண்ணகியும் திருமாலை வணங்கிப் பின் புத்தவிகாரத்தையும் வணங்கி கடந்து பின் அருக தேவனையும் வணங்கிச் செல்கின்றனர். இவ்வாறே இளங்கோவடிகளும் எல்லாச் சமய தெய்வங்களையும் எல்லாச் சமயத் துறவிகளையும் உயர்வாகவே குறிப்பிட்டுள்ளார்.

மாடலன் செங்குட்டுவனுக்கு அறவுரை கூறியதைக் குறிப்பிடும் இடத்தில் இளங்கோவடிகள் தனது கொள்கையைத் நேரடியாகவே வெளிப்படுத்தியுள்ளார் . வேள்வி செய்யச் சொன்ன மாடலனின் கருத்துகளை 'உயர்ந்த பொருள்' என்றும் அந்த வித்து விளைந்து செங்குட்டுவன் வேள்வி செய்ய விரும்பினான் என்றும் இளங்கோவடிகள் கூறு கின்றனர். அதாவது வேள்வி செய்தல் சிறந்தது என்பதே அவர் கருத்து என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் அவர் மாடலனை , 'மெய்ந்நெறி விரும்பிய மாடலன் ' என்று கூறுகிறார் . ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் சமயமே மெய்ந்நெறி என்று கூறுவது சமய உலகில் வழக்கம் . இங்கு மாடலனின் நெ றியான வைதிகமே மெய்யான நெறி என்பதே தன் கொள்கை என்பதை இளங்கோவடிகள் வெளிப்படையாக உணர்த்திவிட்டார் . இவை இளங்கோவடிகள் வைதிக இந்து சமயத்தினர் என்பதை திட்டவட்டமாக உணர்த்துகின்றன. எனவே அவர் வேதத்துக்கும் வேள்விக்கும் எதிரான சமணர் அல்லர் என்பதும் வேதத்தையும் பிராம ணரையும் வேள்வியைப் போற்றும் வைதிக இந்து மதத்தினர் என்பதும் ஐயத்துக்கு இடமின்றித் தெளிவாகும்.

**முடிவுரை:**

இதுவரைக் கண்டவற்றின் முடிபுகளை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்:

1. 'அடிகள்' என்ற சொல்லைக் கொண்டோ கவுந்தியடிகள் மற்றும் சாரணர் கூற்றாக இளங்கோவடிகள் கூறுபவற்றையும் கொண்டோ இளங்கோவடிகளைச் சமணர் என்று கூறுவது தவறானது.
2. அடியார்க்கு நல்லார் உரை கோட்டம் என்பதற்கு அருகன் கோட்டம் என்று ஆதாரம் குறிப்பிடாமல் கூறியதைக் கொண்டு இளங்கோவடிகளைச் சமணர் என்று கூறத் தேவையில்லை . எல்லாச் சான்றுகளையும் ஆராய்ந்து பின் முடிவு செய்வதே முறையானது.


http://Creativecommons.org//license/by/4.0/.

3. பிற மதத் தெய்வங்களையும் இகழாது போற்றும் இந்து மதத்தின் கொள்கைப்படி அவர் பிற மதக் கடவுள்களையும், பிற மதப் பெரியோரையும் உயர்வாகவே சித்திரித்துள்ளார் . பாத்திரப் படைப்பில் சிறந்த இளங்கோவடிகள் கவுந்தியடிகளை அவரது சமணக் கொள்கைக்கேற்ப அமைத்துள்ளார்.
4. இளங்கோவடிகள் வைதிக இந்து மதத்தினர் என்பதையும் அவர் சிவனுக்கே முதன்மை தருபவர் என்பதையும் சிலப்பதிகாரம் நெடுகிலும் அவர் கூறிய கருத்துகளைக் கொண்டு அறியலாம்.

**மேற்கோள்கள்:**

1. Vaiyapuri pillai, S., History of Tamil language and literature, 1956, p.143.
2. பாலசுப்ரமணியன், சி.,தமிழ் இலக்கிய வரலாறு, 1998, பக். 102.
3. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, 1961, பக். 80.
4. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், 2002, பக்.96, 119.
5. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும், 1920, பக். 1.
6. மேலது பக். 12.
7. மேலது பக். 50, 191, 248.
8. வேங்கடசாமி நாட்டார், ந. மு., சிலப்பதிகாரம் - உரை, சென்னை, 2014, பக். 12, 25.
9. ஜம்புநாதன், எம். ஆர்., இருக்கு வேதம் - பகுதி - 1, 1991, 1:50 பக். 80, 1: 91 பக். 147 , 5:83 பக். 759.
10. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும், 1920, பக். 188.
11. மேலது பக். 190 -194.
12. மேலது பக். 458.
13. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், 2002, பக். .171.
14. Vaiyapuri pillai, S., History of Tamil language and literature, 1956, p.153.
15. Swamikannu Pillai, L. D., An Indian Ephemeris (AD 700 – AD 1799) – Vol.1 Part 1- General principles and Tables, 1922, p. 459 - 469.
16. தட்சணாமூர்த்தி, ந., சங்ககாலத் தமிழரின் சமயம் - ஒரு மீளாய்வு - முத்தரசி இணைய ஆய்விதழ்க் கட்டுரை - https://zenodo.org/records/17093296
17. Buhler, G. (Tr), The Laws of Manu, Sacred Books of the East series Vol. 25, 1886, Slokas:5.48, 5:49, 5.22, 5.23, 5.27, 5.31, 5.32, 5.33, 5.36, 5.41.
18. தட்சணாமூர்த்தி, ந., திருக்குறளும் வேள்வியும் - 'முத்தமிழ் மாநாடு' கருத்தரங்க மலர் - நான்காம் தமிழ்ச் சங்கம் மற்றும் செந்தமிழ்க் கல்லூரி, மதுரை - https://archive.org/details/20251022_20251022_1253
19. புத்தமித்திரனார், வீரசோழியம், (பதி-ர்) சி.வை. தாமோதரம் பிள்ளை, 2008, பாயிரம்: 5-6.

**துணை நூல் பட்டியல்:**

1. எட்டுத்தொகை.
2. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும் , (பதி-ர்) உ. வே. சாமிநாதையர், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1920.
3. தட்சணாமூர்த்தி, ந., சங்ககாலத் தமிழரின் சமயம் - ஒரு மீளாய்வு - முத்தரசி இணைய ஆய்விதழ்க் கட்டுரை - https://zenodo.org/records/17093296
4. தட்சணாமூர்த்தி, ந., திருக்குறளும் வேள்வியும் - 'முத்தமிழ் மாநாடு' கருத்தரங்க மலர் - நான்காம் தமிழ்ச் சங்கம் மற்றும் செந்தமிழ்க் கல்லூரி, மதுரை https://archive.org/details/20251022_20251022_1253
5. தொல்காப்பியம்.
6. பத்துப்பாட்டு.
7. பாலசுப்ரமணியன், சி.,தமிழ் இலக்கிய வரலாறு, மணமலர்ப் பதிப்பகம், சென்னை, 1998 (27ஆம் பதிப்பு)
8. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.
9. புத்தமித்திரனார், வீரசோழியம், (பதி-ர்) சி.வை. தாமோதரம் பிள்ளை , உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை, 2008 (மறு அச்சு).


http://Creativecommons.org//license/by/4.0/.

10. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, கலைக்கதிர் வெளியீடு, கோவை, 1961.
11. வேங்கடசாமி நாட்டார், ந. மு., சிலப்பதிகாரம் - உரை, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2014.
12. Buhler, G. (Tr), The Laws of Manu, Sacred Books of the East series Vol. 25, London, 1886
13. Swamikannu Pillai, L. D., An Indian Ephemeris ( AD 700- AD 1799) - Vol.1 Part 1- General principles and Tables, Government Press, Madras, 1922.p. 459,
14. Vaiyapuri pillai, S., History of Tamil language and literature, New Century Book House. Chennai, 1956.

***


http://Creativecommons.org//license/by/4.0/.